www.tamilarangam.net


# களத்தில்




தேச விடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சத்தியாக விளங்குவது தேசப் பற்று. தேசப்பற்றானது உணர்வுபூர்வமானது. மனிதர்களின் அடிமனதில் ஆழவேரோடி நிற்பது. காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால், புவியியல் எல்லைகளுக்கும் அப்பால், மனிதர்களை ஆட்கொண்டு நிற்கும் ஒரு அபூர்மானசக்தி.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

(11.02.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (179) அன்பளிப்பு : 60 p



## போர்முனையில் மாகத் தீ வளர்க்கும் வீரத் தலைமுறை தாகம் தமிழீழமென தவம் செய்கிறது



## தமிழர் எதிர்காலத்திற்கும் வாழ்வுக்குமான சத்திய வேள்வியில் ஒரு தலைமுறை!

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# புரியாத புதிர்



வன்னி மக்களின் உணவுக்கும் மருந்துக்குமான உண்ணா விரதப் போராட்டம் 115 வது நாளை, பெப்ரவரி 4ம் திகதி அடைந்தது. அதைக் குறித்து எதுவித அக்கறையுமே காட்டாத சிறிலங்கா அரசாங்கம், தனது 51வது சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருந்தது. இந்த சம்பவமானது, சிறிலங்கா தமிழர்களைத் தனது குடிகளாக என்றுமே கருதவில்லை என்பதற்கு மற்றொரு சரித்திரச் சான்றாக உள்ளது. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் காரணத்தை, மேலும் தெளிவாக்குகின்ற மற்றொரு சான்றாகவும் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்டங்களின் படி, ஒரு அரசாங்கம், தனது குடிகள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு பகுதியினருக்குப் பாதுகாப்பையும், அமைதியையும் அளிக்கத் தவறினால், அவ்வரசாங்கம் செயல்திறன் அற்றதாகக் கருதப்பட வேண்டும். இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையினதும் சர்வதேச நாடுகளினதும் அதிமுக்கிய கடமையாகின்றது.

இந்தப் பொறுப்பை நினைவுறுத்தும் அழைப்பாக வன்னி வாழ் தமிழ் மக்களின் மகஜர்கள் தொடர்ச்சியாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கோபி அனனுக்கும், ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் ஆணையாளருக்கும் கடந்த நூற்றுப்பதினைந்து நாட்களாக அனுப்பப்பட்டு வந்துள்ளது. வன்னி மக்களின் இந்த மகஜர்கள் பிரச்சாரக் கடிதங்கள் அல்ல. உயிர்வாழ்தலுக்கான அவசர வேண்டுகோள்.

இந்த சிறிலங்கா அரசாங்கத்தின் இனஅழிப்பு நோக்கிலான உணவுத் தடையினால், ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் பசிக்கொடுமையால் செத்ததும், பலர் பட்டினிச் சாவு நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதும் யதார்த்த உண்மைகளாக உள்ளன. பிஞ்சுக்குழந்தைகள் சத்தற்ற சமுதாயமாக நெளிவதும், முதியவரும், பெண்களும் தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக உணவின்றி துடிதுடித்து, மருந்தின்றி நோய்களினால் வதைபட்டு, வாடிவதங்குகின்றனர். ஆயினும் வேதனையான உண்மை என்னவென்றால் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச அமைப்புக்களும், சர்வதேச நாடுகளும் இது வரை, தமிழரின் பசித்த வயிற்றுக்கு உணவு கிடைக்க எதுவுமே செய்யவில்லை.

இது சர்வதேச நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழீழ மக்களிடை மட்டுமல்ல– தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா வாழ் தமிழர்களிடையிலும் ஆழ்ந்த கவலையையும், ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் நடுநிலைத் தன்மையின் மேல் அவநம்பிக்கையையும் தோற்றுவித்துள்ளமை மறுக்க முடியாத ஒன்று. இதனை நாம் உட்பட, பல ஆய்வாளர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும், அமைதிக்காகப் பாடுபடுபவர்களும் பல முறை சுட்டிக்காட்டியும் இதுவரை பயன் ஏதும் இல்லை. கல்லறைகளில் மலர்ச்செண்டு வைத்து வணங்குவது தான் இந் நிறுவனங்களின் கையாலாகாத்தனம் என்னும் சில ஆய்வாளர்களின் கருத்தினை மறுக்க முடியாத நிலைக்கு உலகத் தமிழினம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகில் மனித உரிமைகள் என்பது ஒரு அரசாங்கத்தின் ஜனநாயகத் தன்மையை அளவிடுவதற்கான கருவியாக கணிக்கப்படுகிறது. ஆனால் மனித உரிமை மட்டுமல்ல, உயிர் வாழ்தலுக்கான உணவும், மருந்தும் கூட தமிழீழ மக்களுக்கு திட்டமிட்ட வகையில் சிறிலங்காவால் மறுக்கப்பட்டு வருவது மிகத் தெளிவாகத் தெரிந்தும் – இச்செயல் திட்டமிட்ட இனஅழிப்பு என்பது புரிந்தும் – எவ்விதமான, உருப்படியான அழுத்தங்களையும் சிறிலங்கா மேல் சர்வதேச சட்டங்களை நெறிப்படுத்த வேண்டிய அமைப்புக்களால் ஏற்படுத்தப்படாத நிலை சர்வதேச அமைப்புக்களின் அலட்சியமா? அல்லது சர்வதேச அமைப்புக்களை வல்லரசுகளும், ஆதிக்க அரசுகளும் தம் கைப்பொம்மைகளாக ஆட்டிப் படைத்து தமது இராணுவ சந்தை விஸ்தரிப்புக்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் ஊடாகச் செயற்படும் நிலையின் விளைவா? என்பது புரியாத புதிராக உள்ளது. புதிர் எதுவாக இருந்தாலும் இருக்கட்டும். ஆனால் புதிருக்கு விடை காணும் மட்டும் எமது உடன்பிறப்புக்களின் உயிர்கள், உடல்கள், உள்ளங்கள் அழிவுறுவதைப் பார்த்துக் கொண்டு, நம்மால் உளஅமைதியுடன் வாழமுடியாது என்பதைச் சர்வதேச நாடுகளிலும் வாழும் தமிழர்களாகிய நாம் மிகத்தெளிவாக உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய அதிமுக்கியமான நேரத்தில் நாம் வாழ்கின்றோம். இந்த வெளிப்படுத்தல், தெளிவுபடுத்தல் ஒரே தலைமையின் கீழ் – இந்த இந்த இலக்குகள் எய்தப்படல் வேண்டும் என்ற கட்டமைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடு. நாம் நமது மக்களுக்காக குரல் கொடுப்பது, எமது மறுக்கப்பட முடியாத உரிமை. ஆனால் எமது உணர்ச்சிகளையும், உள்ளத்து ஆதங்கங்களையும் மட்டும் நாம் வெளிப்படுத்துவதால் சர்வதேச கவனத்தை எம்மால் பெறமுடியாது.

யுத்தம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடு. ஆதலால் தான் தனது தேசிய பாதுகாப்புக்கான யுத்தம் என்ற சிறிலங்காவின் நியாயப்படுத்தலைக் காரணம் காட்டி, சிறிலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையில் தாம் தலையிடாமல் இருப்பதாக சர்வதேச அமைப்புக்கள் தமது அலட்சியங்களை நியாயப்படுத்துகின்றன. இந்நிலையில் மனித உரிமைகள் மறுக்கப்படுவதை மட்டும் காரணமாகக் கருதி சர்வதேச அமைப்புக்கள் தலையீடு செய்யமாட்டா. சர்வதேச அமைப்புக்கள், கொலைகாரனிடமே நீதி கேட்ட கதையாக சிறிலங்கா அரசாங்கத்திடமே நீதியை, ஒழுங்கை, சட்டநெறிப்படுத்தலை, உணவு வழங்கலை ஒழுங்கு செய்யும் படி பல்லவி பாடிக்கொண்டிருக்கப் போகின்றன. சிறிலங்கா அரசாங்கமும் தான் மட்டுப்படுத்தப்பட்ட உணவை அனுப்புவதாகக் கூறி, பதங்கெட்டுப் போன உணவுகளைக் கொட்டும் தொட்டியாக எமது தாயகத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. அவ்வாறே மற்றைய மனித உரிமைகளைப் பொறுத்த மட்டிலும் சட்டங்களையும், ஒழுங்கையும் தாம் செம்மையாக்க முயற்சிப்பது போலவும், யுத்தம் அதனை முழுமையாகச் செய்ய அனுமதிக்கவில்லை எனவும் சிறிலங்கா நாடகமாடி வருவது யாவரும் அறிந்த விடயம். ஆனால் நடைமுறையில் காணாமல் போதலும், பாலியல் வன்முறைகளும், இனக்கொலைகள், இனத்துன்புறுத்தல்களும் சிறிலங்கா ஆயதப்படைகளினதும், அதன் துணைப்படைகளான தமிழ்க் கூலிக்குழுக்களினதும் திட்டமிட்ட செயற்பாடுகளால், நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மைகளாக உள்ளன. இதனால் எம்மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், இந்த நூற்றாண்டில் மனித்குல வரலாறு காணாத கொடுமைகளாக உள்ளன.

இந்நிலை மாறவேண்டுமென்றால், இலங்கைத் தீவில் நடப்பது உள்நாட்டுப் பிரச்சினையல்ல. இரு தேச இனங்களுக்கிடையிலான சர்வதேசப் பிரச்சினை. சிறிலங்கா அரசு – தமிழீழ அரசு என்ற இரு தேச அரசுகள் காலனித்துவத்தால் சில நிபந்தனைகளுடன் ஜனநாயக ஒற்றையாட்சிக்குள்ளாக்கப்பட்டன. இந்நிபந்தனைகளை மீறியதனால், இலங்கைத்தீவில் ஜனநாயகத் தன்மையையே அழித்துவிட்ட சிறிலங்கா அங்கே ஒரு ஆக்கிரமிப்பு அரசாங்கத்தைத், தமிழீழ மக்கள் மேல் நிறுவுவதற்கான ஆயுத நெருக்குதல்களைத் தமிழர்கள் மேல் மேற்கொண்டு, தமிழீழ மக்களை இனஅழிப்புச் செய்வதையும், தமிழீழத் தேசத்தை உட்கட்டுமான உருக்குலைப்புச் செய்வதையும், இந்த சர்வதேச சட்ட மீறல்களை நியாயப்படுத்துவதையும் தனது அரசியல் செயற்திட்டமாகக் கொண்டு செயற்பட்டு வருவதே, தமிழீழ மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தைத் தாமே நிர்ணயிக்க வேண்டிய நிலைக்கு (சுயநிர்ணய உரிமைப் பிரகடனம்) கொண்டு சென்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்கள் பலவற்றாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த மக்களின் பிரிக்கப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை, சிறிலங்கா இனஅழிப்பு மூலம் தடுத்து நிறுத்த முற்படுவதே, தமிழ் மக்கள் தமது இன்னுயிர்களை ஆயுதமாக்கி ஆயுதப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வைத்துள்ளது. ஆகவே இது உள்நாட்டுப்பிரச்சினையல்ல– பிரிவினைவாதமும் அல்ல– ஜனநாயக ஆட்சிக்கு ஏற்படுத்தப்படும் தடையுமல்ல– பயங்கரவாதமும் அல்ல– தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான இனக்குரோதமும் அல்ல– பௌத்த, இந்து மக்களுக்கிடையிலான மதப்பிரச்சினையுமல்ல. இந்தப் பெயர்கள் எல்லாவற்றையும் தாம் விரும்பியபடி பரப்பி சிறிலங்கா சர்வதேச பிரச்சாரங்கள் மூலம் தனது ஆக்கிரமிப்பை– இனஅழிப்பை– தமிழீழத் தேசத்தின் இயற்கையை, உட்கட்டுமானத்தை உருக்குலைப்பதை நியாயப்படுத்தி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தின் சர்வதேச அங்கீகாரத்தைத் தடுத்து வருகிறது. இதனால் கிடைக்கும் கால அவகாசத்தைப் பயன்படுத்தி, தனது ஆக்கிரமிப்பை நிறுவுவதற்கான வழிமுறைகளை, குறிப்பாக தமிழீழ மக்களின், தமிழீழத் தேசத்திற்கான தேசிய பாதுகாப்பு வழங்கும் ஆற்றலை அழிக்கப் படாதபாடுபட்டு வருகின்றது. ஆனால் தமிழீழத் தேசத்திற்கான தேசிய பாதுகாப்பை வழங்கும் அரசாங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் விளங்குவதால், தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தனது இலக்கையடையலாம் என்ற நோக்குடனான அரசியல் இராணுவ நடவடிக்கைகளில் சிறிலங்கா முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றது. ஆனால் இந்த சிறிலங்காவின் நடவடிக்கைகள் தமிழீழ மக்களே தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தேசிய விடுதலை இயக்கமாகத் திரண்டு எழுந்து தமது இன்னுயிர்களால், தமிழீழ மக்களைப் பாதுகாத்து நிற்கின்றனர் என்ற உண்மையை உலகிற்கு நன்கு தெளிவாக்கியுள்ளது.

இந்நிலையில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை உலகு அங்கீகரித்தாலே தமிழீழ மக்களின் மேல் சிறிலங்கா நடத்தும் இனஅழிப்புக்கள்– ஆக்கிரமிப்புக்கள் முற்றுப்பெறும். இதற்கு தமிழீழ மக்களின் அரசாங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழத் தேசத்தின் தலைவராக மேதகு. வே. பிரபாகரன் அவர்களும் விளங்குகின்றனர். இந்த உண்மை இறைமையை உலகு ஏற்றேயாக வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் பணிவு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசாங்கத்திற்கே உண்டு. இதனை ஆயுதப்படைபல பிரயோகத்தின் மூலம் சிறிலங்கா பெற முயற்சித்து வருகிறது. எனவே சிறிலங்கா அரசாங்கத்தின் இறைமை தமிழீழ மக்கள் மேல் செல்லுபடியற்றதாக உள்ளதால், வன்னிப் பிரதேசம் உட்பட, சிறிலங்காவிடம் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள தமிழீழத் தேசமெங்கும் வாழும் மக்களுக்கான உணவு– மருந்து– தொழில்– கல்வி– போக்குவரத்துத் தேவைகள், தங்கு தடையின்றி மக்களைச் சென்றடைய, சர்வதேச நிறுவனங்கள் உடனடியாக ஆவன செய்தல் வேண்டும். இதில் தலையிடத் தவறுகின்ற ஒவ்வொரு நிமிடமும் சர்வதேச அரசுகளும், சர்வதேச அமைப்புக்களும் ஆக்கிரமிப்புக்கும், இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கும் இதன் மூலம் அழிவுறும், துன்புறும் தமிழ் மக்களின் துயரங்களுக்கும் பொறுப்பாளிகளும் ஆகின்றனர். இதனால் இன்றைய அரசியல் உலகின் கோசங்களான உலகமயமாக்கல் (Globalisation)– தாராளமய ஜனநாயகம் (Liberal Democracy) இரண்டுமே அர்த்தமற்றவைகளாகவும் சர்வதேச அமைப்புக்கள் துணைபோகின்றன. ஏனெனில் உலக சமுதாயத்தின் பிரிக்கப்பட முடியாத அங்கங்களான தமிழீழ மக்களுக்கு இன்று நடக்கும் மனிதவதைகளைச் செம்மைப்படுத்த முடியாத இந்த தத்துவங்களால் நாளை உலகளாவிய உறுதிப்பாட்டை, ஒருங்கிணைப்பை எவ்வாறு மேற்கொள்ள முடியும்? வன்னி மக்களின் 115 நாள்களுக்கும் மேலாக நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்திற்குத் தகுந்த விடையினை உலக அமைப்புக்கள் அளிக்கும்வரை இந்தக் கேள்விக்கு விடையும் புரியாத புதிராகவே இருக்கப்போகிறது.

◆◆◆.

AUSTRALIA
TCC
P O Box 375,
Preston,
Victoria 3072.

CANADA
WTM
64 Eaton Avenue,
Toronto,
Ontario M4J 2Z5.

DENMARK
LTTE
P.O.Box 47,
7400 Herning.

FRANCE
TCC
341 Rue Des
Pyrenees,
75020 Paris.

GERMANY
TCG
Postfach 340251,
51624 Gummersbach.

ITALY
TCC
Via Mariano Stabile - 49,
90139 Palermo.

NETHERLANDS
TCC
Grt. Hertoginnelaan-106,
2517 EL Den Hagg.

NORWAY
TCC
P.O.BOX 1699 Vika,
0110 Oslo.

SWITZERLAND
WTTC
Joses Str - 110,
8005 Zurich.

SWEDEN
TCC
Glomminge Grand-25,
3rd Floor,
16362 Spanga.

UNITED KINGDOM
UTO
Eelam House,
202 Long Lane,
London SE1 4QB.

U.S.A
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# ஜெயசிக்குறுய் இறுதி இரங்கலுரை அடுத்தது என்ன?

## சந்திரிகா அரசு போரையே நாடுகிறது சமாதானத்தை அல்ல

எமது உள்நாட்டு சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த 3 வருடங்களாக பல்வேறுபட்ட தரப்பினர் உதவி வழங்க முன் வந்தபோதும், அரசாங்கம் இன்றுவரை ஒவ்வொரு முயற்சிகளையும் நிராகரித்து அல்லது பேச்சுவார்த்தைகளிற்கான வேண்டுகோள்களை பல்வேறு காரணங்களைக்கூறி ஏன் மறுத்தது என்ற கேள்வியை நாம் எழுப்பியிருந்தோம்.



தற்போது அவர்கள் (சிறீலங்கா அரசாங்கம்) தமது எதிரி கடந்த வருடம் நவம்பர் இறுதியில் பிரேரித்த 'மூன்றாம் தரப்பு மத்தியத்துடனான நிபந்தனைகளற்ற அரசியல் பேச்சுவார்த்தை' என்ற விடயத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இன்று வரை இது தொடர்பாக நாட்டின் மௌனமானது அதாவது கடந்தகால, நிகழ்கால கோசங்களை போலித்தனமாக்கியுள்ளது.

இம் முரண்டு பிடிக்கும் தன்மைக்கும், தாமதப்படுத்தும் தந்திரோபாயத்திற்குமான காரணமானது தெளிவாக எம்மால் பார்க்கக்கூடியது. அரசானது போர் மூலமான தீர்வு என்ற தனது விடாப்பிடியான கொள்கையில் வாழ்கின்றது. இந் நிலைப்பாடானது 1994 மேயில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து எடுக்கப்பட்டது. தமது இப் பயணத்தை அவர்கள் போர்மூலம் சமாதானம் என்ற மோசமான கோசத்துடன் மேற்கொண்டனர்.

அப்போதிருந்து அவர்கள் மீளத் திரும்பிப் பார்க்கவேயில்லை. ஆனால் கடந்த செப்டம்பரில் கிளிநொச்சியை மீளக் கைப்பற்றி அரசிற்கு பாரிய உயிர், உடமைச் சேதங்களை புலிகள் ஏற்படுத்தியமையானது அவர்களுக்கு யதார்த்தத்தை புரிய வைத்தது. இந் நிலைமையானது மிகவும் ஓங்கி பேசப்பட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கையை ஒன்றரை வருடகாலப் பிரயோசனமற்ற அணிவகுப்பின் பின், கைவிட வைத்தது.


கடந்த வருடம் ஒக்டோபர் 10ம் திகதி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியானது கைவிடப்பட்ட இம் முயற்சியின் சேதாரம் பற்றி முன்வைத்த பட்டியலைப் பார்ப்போம். 3566 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 11200 ராணுவத்தினர் உடற்சேதமடைந்தும் இருந்தனர். (75க்கு குறைவான பொலிஸ், கடற்படை, விமானப்படை உயர் அதிகாரிகள் இப்பட்டியலில் அடங்குவர்.)

**— ஏயார்வைஸ் மார்ல் ஹரிகுணதிலக —**

நடவடிக்கையின் இறுதிக்கட்டங்களில் நான்கு படையணிகள் முன்னணி அரங்குகளிற்கு நகர்த்தப்பட்டும், 3500 விமானப் படையினரும், 3000 கடற்படையினரும், 2000 பொலிசாரும் கைப்பற்றிய பகுதிகளில் நிலை கொள்ளவும் வைக்கப்பட்டனர்.

செப் 27–29களில் (1997) கிளிநொச்சியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 1900 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 2000 பேர் காயப்பட்டார்கள் என பாராளுமன்ற விவாதத்தில் விடுக்கப்பட்ட எதிர்க்கட்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதில் 4 பீரங்கிகள் 1000 குண்டுகளுடனும், 2 ரி 55 டாங்கிகள், 8 பவல் கவச வாகனங்கள் 75 ட்ரக்குகள், ஜீப்புகள் மற்றும் ட்ரக்டர்கள் இழக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. மேலும் இரண்டு மில்லியன் தோட்டாக்களுடன் (7.62 மிமீ, 0.5 கலிபர்) 2500 சிறுரக ஆயுதங்களும் இழக்கப்பட்டன. முழு ஒப்பரேசன் ஜெயசிக்குறுய் நடவடிக்கையிலும் முதல் 3 அல்லது 4 நாட்களில் 5 ரி55 டாங்கிகளை படைகள் இழந்ததாக அவ்வறிக்கையில் கூறப்படுகின்றது. 9 ஜூன் இல் இடம்பெற்ற தாண்டிக்குளம் எதிர்த் தாக்குதலில் 5 டாங்கிகள் தகர்க்கப்பட்டன. ஒரு பீரங்கி இழக்கப்பட்டது.

25 ஜூனில் (1997) ஓமந்தை ராணுவத்தளம் புலிகளால் தாக்கப்பட்ட போது 4 பீரங்கிகள் அழிக்கப்பட்டுள்ளன. ஏராளமான வாகனங்கள் இழக்கப்பட்டன. புளியங்குளத்தைச் சூழ இடம்பெற்ற கடும் சண்டையில் ஓகஸ்ட் 19ல் மேலும் 6 டாங்கிகள் இழக்கப்பட்டன. ஒரு எம். ஐ. 24 உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இரு ராணுவக் களஞ்சியங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது (இடங்கள் அவ் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை) 4 டிசம்பர் 97ல் சிலநூறு துருப்பினரைக் கொன்று புலிகள் ஏராளமான கனரக ஆயுதங்களைக் கைப்பற்றினர். மீண்டும் 02 பெப்ரவரி 98ல் இயக்கச்சி பீரங்கித் தளத்தை அழித்தனர். 02–03 மேயில் (1998) மாங்குளத்தில் ஏற்பட்ட கடும் தாக்குதல்களில் ஏராளமான பீரங்கிகளையும் கனரக ஆயுதங்களையும் 450 துருப்பினரை கொன்றும் 1200 துருப்பினரை காயப்படுத்தியும் இருந்தனர்.



இக்கட்டத்தில் உள்நாட்டு வெளிநாட்டு நிருபர்களுக்கான செய்தித் தணிக்கையை அரசு அமுல்ப் படுத்தியது. இன்றுவரை (98 நவம்பருக்கு முன் போரை முடித்துவிடுவோம் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டும் கூட) தணிக்கை தொடர்கின்றது.

### இவ் நடவடிக்கையின் பொருளாதாரச் சேதங்கள் என்ன ?

இராணுவ ஆயுத தளபாடங்களின் இழப்புக்களை சரியாக கணிப்பிட முடியாவிடினும் ஒன்றரை வருட காலத்தில் 2 பில்லியன் ரூபாய் இழக்கப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கலாம்.தினசரி போர் முனையில் இடம் பெற்ற செலவீனம் 6.5 மில்லியன் ரூபாய்கள். இது கடந்த செப்டம்பரில் மாங்குளத்தைக் கைப்பற்றும் வரை தொடர்ந்தது.

வன்னி மக்களினதும் இராணுவத்தினதும் நன்றிக்குரிய விதத்தில் ஒபரேசன் ஜெயசிக்குறுய் முடிவடைந்து விட்டது.

இது அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குரிய உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதா ?

இரண்டு அரசின் பிரதான பிரமுகர்களின் அண்மைக்கால அறிக்கைகளையும் கிளிநொச்சி வீழ்ச்சிக்கு பிற்பட்ட காலத்தில் செய்யப்பட்ட தயாரிப்புக்களையும் திட்டங்களையும் வைத்து நோக்கும்போது நீண்ட நோக்கில் இம் முயற்சி இல்லை எனலாம்.

கடந்த 06 நவம்பரில் பாராளுமன்றத்தில் 'எச் சூழ்நிலைகளிலும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கான வேண்டுகோளை பரிசீலிக்க மாட்டோம்' எனக் கூறும் பாதுகாப்பு இணை அமைச்சர் எமக்குள்ளார். இது இவர் செப்டம்பரில் பாராளுமன்றத்தில் தெரிவித்ததை திரும்பக் கூறுவதாகும்.

'நீங்கள் என்னிடம் எனது நேரத்தை வீணாக்காது புலிகளுடன் உடனடி போரை முயற்சிக்குமாறு கூறினால் நான் என்னால் இயன்றவரை முயல்வேன். தற்போது அரசியல்வாதிகள் ஆக்கிரமிக்கும் அரசியல் தீர்விலும் பார்க்க ராணுவத்தீர்வே தென்படுகின்றது,' என்று கூறும் வெளி விவகார அமைச்சர் எம்மிடமுள்ளார்.

இராணுவத்தை விட்டுத் தப்பிச் சென்ற 15000 பேரை சுற்றிவளைத்துப் பிடிப்பதற்கான அரசின் 'தவிப்பு' நிலைமையை நாம் அறிவோம். இது தண்டனையிலும் பார்க்க டசினுக்கு மேற்பட்ட மன்னிப்புக்களைக்கொண்ட 'இனிய பேச்சுக்களால்' இடம்பெறுகின்றது. இதனுடன் சேர்த்து இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க 5000 புதிய முயற்சிகளும் இடம்பெறுகின்றன.

இக் காப்பாற்றும் நடவடிக்கையின் வேகத்தில் கூட்டு நடவடிக்கையின் பணியகம் (JOB) உருவாக்கப்பட்டது. இது எதிர் காலத்தில் தந்திரோபாய நடவடிக்கைகளை வகுக்கும் பிரிவில் இருக்கவேண்டும். முன்பிருந்த (JOB) இற்கும் இதற்கும் நிரம்ப வேறுபாடுகள் இருந்திருக்க முடியாது.

**இராணுவ ஆயுத தளபாடங்களின் இழப்புக்களை சரியாக கணிப்பிட முடியாவிடினும் ஒன்றரை வருட காலத்தில் 2 பில்லியன் ரூபாய் இழக்கப்பட்டிருக்கலாம் கணிக்கலாம். தினசரி போர் முனையில் இடம் பெற்ற செலவீனம் 6.5 மில்லியன் ரூபாய்கள்.**

அரசின் பேச்சுவார்த்தை தொடர்பான போர்வையை மேலும் அகற்ற சர்வதேச சமூகத்தில் அனைத்து உதவிகளையும் அரசு நிராகரித்ததை நாம் பார்த்தோம். இது அரசினது அதிபேராசை பிடித்த போர்மூலம் அரசியல் இலக்கை அடையலாம் என்ற எண்ணத்தை வெளிக்காட்டுகிறது.

(முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயர்வைஸ் மார்சல் ஹரி குணத்திலக எழுதிய கட்டுரையின் தமிழாக்கம். இவரது புதல்வர் புலிகளால் 'புக்காரா' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது கொல்லப்பட்ட விமானப்படை அதிகாரியாவார்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# வெளிக்கிளரும் ஒரு மௌனக் குமுறல்

பாதுகாப்பற்ற
எம் பூமிக்குள்ளிருந்து
எழுகின்ற சாக்குரல்களை
மேவியொலிக்கிறது என் ஓலம்.
அநியாயமாய்ப் போனதற்காக
வெம்பி அழுகிறது என் ஆன்மா.
கற்றுயர்ந்து வாழ்வதற்கான வேகமும்
கன்னிப் பருவத்துக் கனவுகளும்
தீயிலிடப்பட்டு துடித்திறந்தன.

என் உள்ளத்துள்ளிருந்து
உரைக்கின்றேன்.
கற்பதைத் தவிர இம்
மண்ணிலிருந்து
எதையும் நான் செய்யவில்லை.
துப்பாக்கி முழக்கத்தின்
தூரத்திலேயே
எப்போதும் இருக்க விரும்பினேன்.
துயரச்சுமைகளை எம் சந்ததி
சுமந்த போது
என் தோள் மாற்றி
இளைப்பாற விடவேண்டும்
என்ற எண்ணம் ஒரு போதும்
உதிக்கவில்லை.

என் விருப்புகள்
படிப்பு .. படிப்பு. . . .
பட்டம்...தொழில்... திருமணம்...
என்ற திசைகளை நோக்கியே
சிறகடித்துப் பறந்தன.



வேலிக்கு வெளியே
தலை நீட்டிப் பார்ப்பதை
ஏற்கமுடியாத என்னூரின்
காவலிடப்படாத நாட்களில் – நான்
களவாடப்பட்டேன்.
உயரத்தில் பறக்க முனைந்த
என் சிறகுகள் வெட்டுண்டு
பூமியினடியில் புதையுண்டு போயின.

எப்படிச் செத்தேன்.
ஓ.. . . அந்தக் கொடுமையை உரைக்க
என்னால் முடியாது.
பெண்ணென்று வாழ்ந்த என்னால்
உயிர் உதறிய பின்னும்
அக்கொடுமைகளை
வாய் கொண்டுரைத்தல் இயலாது.
மானம் பெரிதென வாழ்ந்த குலமரபில்
நான் கசக்கப்பட்டிறந்தேன்
என்று எவர்க்குச் சொல்ல?

நரக வெளிகளில்
பல மிருகக் கரங்களால்
குதறப்பட்ட பின்பு
மரணவலியில் துடித்திறந்த
என்னிதயம் ஓலமிட்ட உண்மைகள்
இங்கு எவர்க்குமே கேட்கவில்லை.
ஒலியடங்கி ஒலியடங்கி
மெல்ல மெல்லச் செத்துப் போவது
எப்படியென்று பார்த்து ரசித்த
'புண்ணியவான்களுக்காக'
ஒரு பாவமுஞ் செய்யாது
என்னைப் பலிகொடுத்தேன்.

யுத்தத்தின் கோர முகம்
கண்டொளித்த
என் விழிகள்
அமைதிக்காகவோ
பிடுங்கியெறியப்பட்டன?
கொலைப்பாவம் செய்வதை
ஏற்க முடியாத என்னுயிர்
சமாதானத்திற்காகவா
பறிக்கப்பட்டது?
போரொலிகள் நடுவில்
துயர் மறந்து
துணிந்து பற்றிய கருவி நழுவிவிழ
சிதறிப்போன பின்பும்
கடமைநிறைவேற்றிய களிப்போடு
உலா வந்து
இறுதி மரியாதை விதைப்பில்
மண்ணுள் அடங்கும்
அந்தவாழ்வை நினைத்துப்
பொறாமையுறும் என்னால்

இப்போதெதுவும்
செய்ய முடியாது.
அவலப்பட்டு இறந்த நாட்களை
அசைமீட்டு அசைமீட்டு
அமைதி பெறாது
அலைகிறது என் ஆன்மா.
சமாதானத் தூதர்களின்
தூக்குக் கயிற்றில் என் ஆவி
துடித்ததை அறியாதோரே!
நன்றாக உற்றுக் கேளுங்கள்
உப்புக் காற்றின் 'ஊ' வென்ற இரைச்சலில்
கலந்து சிதறும்
என் மௌனக் குமுறல்களை
உணர்ந்து பாருங்கள்.

எம் நிணங்கலந்து சிதறிய
மண்ணுக்குள்ளிருந்து
கிளரும் வேகத்துடன் இடியெழுப்புங்கள்.
சாபமிடப்பட்ட எம் வாழ்வுக்கு
மீட்சி தாருங்கள்.

– அம்புலி –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயபொருளாதாரமும் சுதேச வாழ்வும்


## ஒரு நோக்கு

வளங்களை இனங்காணுதல் ஒரு முக்கியமான பொருளியல் நடவடிக்கையாகும். தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பில் தேசத்தின் வளங்களை இனங்காணுதலும் அவற்றை மறுபடைப் பாக்கம் செய்தலும் - மக்களின் பயன்பாட்டுப் பொருளாக்குதலும் அவசியச் செயன்முறைக்குரியது. சுயபொருளாதாரத்தையும், சுதேசிய எண்ணத்தையும் வளர்த்தெடுக்க சூழலை அறிதலும், வளங்களை இனங்காணுதலும் மிக முக்கியமாகின்றன. நமது சூழலின் வளங்களையும் அவற்றின் இயல்புகளையும் அறிதல், வளங்களையும் காலத்தையும் இணைத்து அவதானித்தல், வளங்களை மறுபடைப்பாக்கம் செய்தலுக்கான சிந்தனை என்பன இந்த நடவடிக்கையின் ஆரம்பநிலைச் செயற்பாடுகளாகும்.

வளங்களை இனங்காணுதல் என்பது ஒரு தொடர் நடவடிக்கை. இனங்காணுதலும் அறிமுகப்படுத்துதலும் ஆய்வு - அறிக்கை என்ற முறையில் அமையும். சூழலின் புவியியல் அடையாளங்களை அறிதல் இதில் முதன்மையானது. புவியியல் அடையாளங்கள் என்னும் போது தேசத்தின் புவியியற் பரப்பில் வனம் (காடு), நீர் (நல்லநீர், உப்புநீர்), கனிமங்கள், மண் என இந்த இனங்காணுகை நடைபெற வேண்டும். ஆய்வு மூலமாக இனங்காணப்படும் ஒவ்வொரு வளமும் மக்களிடத்து அறிமுகப்படுத்தப் படல் அவசியம். ஆனால், துரதிஷ்டவசமாக நமது கல்வியிலோ அல்லது பிற அறிதலுக்கான சாதனங்களிலோ இந்தச் செயல் நடைபெறுவதில்லை. இவ்வாறு ஒரு சமூகம் இருக்குமானால் சூழலிலிருந்து அந்நியப்பட்டும், தனித்தும், வேர்களின்றியும், பிறரிடம் தங்குநிலைக்குள்ளாகியும், அடையாளங்களை இழந்தும் போகக் கூடிய ஒரு அபாயகரமான சுழற்சியில் சிக்க நேரிடும்.

நமது கல்வி, அரச உத்தியோகத்தை மையப்படுத்திய கல்வியாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. அரச உத்தியோகத்திலும், நிர்வாக அமைப்பின் பதவிகளையே இலக்காகக் கொண்ட கற்றற் போக்கே சமூகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக இயந்திரம் தன்னுள் வைத்திருக்கும் அதிகாரமே இவர்களுடைய இந்த மோகிப்புக்குக் காரணமாகின்றது. துறைசார்ந்த அறிவைப் பெறுதல், துறை சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபட வைத்தல், துறைசார்ந்த ஆய்வுச்சிந்தனையை உருவாக்குதல் என்பனவற்றுக்கான கல்வியில் நமது கவனம் குறைவாகவே இருக்கின்றது, அல்லது இல்லை எனலாம். முறைசார்ந்த கல்வியூடாக இந்த அறிதல் நிகழாதது ஒரு பக்கமிருக்க, முறைசார்ந்த சுயாதீனமான சிந்தனைக்கு இடமளிக்கும் அறிதற் சாதனங்களிலும் இதே நிலை காணப்படுவது அதிக கவலையளிக்கின்றது.

ஒரு மனிதனின் அறிதற்தொழிற்பாடு என்பது இரண்டு அடிப்படைத் தன்மைகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று, முழுமையான அடிப்படைக் கற்றற்காலம் - மாணவப்பருவம் - முறைசார்ந்த படிப்புச் செயல். இரண்டாவது வாழ்க்கை முழுதுமான அறிதற்காலம் - பருவ எல்லை இல்லை - முறைசாராத அறிதற்செயல். முதலாவது பாடசாலை மற்றும் நிறுவனமயப்பட்ட கல்வி அமைப்புக்கள் - தொழில் அமைப்புக்களிலும் நிகழ்கிறது. இரண்டாவது தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, நூல்கள், சஞ்சிகைகள் போன்ற மக்கள் தொடர்பு ஊடகங்கள் முதற்கொண்டு நிறுவனமயப்பட்டதும் நிறுவனமயப்படாததுமான அமைப்புக்கள் என்பவற்றினூடாகவும் தொழிற்படுகிறது.



கருணாகரன் (தமிழீழம்)

ஆனால் இந்த இரு நிலைகளிலும் நமது வளங்கள் தொடர்பான எந்த அக்கறையையும் ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுவதில்லை. இதனால், மிகவும் சிக்கலடைந்த ஒரு பொருளாதார வாழ்வுச் சுழிக்குள் நாம் தொடர்ந்தும் அகப்பட்டிருக்க வேண்டியேற்படுகிறது.

சுதேசிய வாழ்வுக்கான ஒரு கல்விக் கொள்கையை நாம் சுயமாக உருவாக்கும் வரை முறைசாராத கற்றல் மூலமாகவே நமது அறிதல் தொழிற்பாட்டை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. இது தான் சாத்தியமானதுமாகும். இதில் சமூக அக்கறையுள்ளவர்களும் சிந்தனையாளர்களும் முக்கிய பொறுப்பெடுத்து உழைக்க வேண்டும். பத்திரிகைகள், புத்தகங்கள், மற்றும் சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி (வீடியோ) என்பன தமது பெரும்பணியாக சுதேசிய வாழ்வுக்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இதிலே வளங்களை இனங்காணுதலும் பிரயோகித்தலும் - முக்கியமான பொருளாக இருக்கும்.

வளங்களை இனங்காணுதல் வெறுமனே 'தகவலுக்காக அறிதல்' என்ற அர்த்தத்தில் அமைந்து விடக்கூடாது. நமது சூழலின் வளமே நமது பொருளாதாரத்தின் அடிப்படை என்ற நோக்குடனும், ஒழுங்குடனும் இந்த அறிமுகப்படுத்தலும் அறிதலும் அமைய வேண்டும். உதாரணமாக வனம் என்ற வளத்தை எடுத்துக் கொண்டால் நமது வனம் தொடர்பான ஒரு பூர்வாங்க அறிமுகம் அதில் முக்கியம் பெறும். காடு அமைந்துள்ள இடம், காட்டு மரங்கள், மரங்களின் தன்மைகள், பருவ காலங்களில் மரங்களில் ஏற்படும் பண்பு மாற்றங்கள், வேர்த்தொகுதி, இலைகளின் அமைப்பு, மரங்களின் வாழ்க்கைக் காலம், பரம்பல், காட்டின் நீர்ச்சுற்றோட்டம், ஆறுகள், காட்டில் வாழும் உயிரினங்கள், அவற்றின் வாழ்க்கை முறைகள், அவற்றின் பரம்பல், பருவகாலங்களில் அவற்றின் தன்மைகள், பருவங்களில் அவை கொண்டிருக்கும் இயல்புகள் என்று காடு பற்றிய அறிதல் நீளும். பின்பு ஒவ்வொரு மரம் தொடர்பாகவோ அன்றி ஒவ்வொரு உயிரினம் பற்றியோ விரிவான ஆய்வுகளும் அறிமுகமும் நடைபெறும். மண்ணுக்கும் இவ்வாறுதான் ஒவ்வொரு பிரதேசத்தினதும் மண்வகை, அவற்றின் இயல்புகள், அந்த மண்ணில் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள், அவற்றின் பயிரிடு முறைகள், மண்மூலமான உற்பத்திப் பொருட்கள், பருவ காலங்களில் மண்ணில் ஏற்படும் மாற்றங்கள், மண்ணடி நீர்த்தன்மை என்று இது விரியும். இவ்வாறே கடலின் அறிவும் பிற ஒவ்வொன்றினதும் இனம் காணுகைகள் என்பதும்.

இவ்வாறு ஒரு முதன்மையான ஆய்வுப் பண்பாடு உருவாகும் போது நமது வளங்கள் தொடர்பான சரியான அறிமுகத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தத் தொழிற்பாட்டை நமது ஊடகங்களில் நாம் மேற்கொள்ள வேண்டும். ஊடகங்களுக்கான பொதுமக்களின் தொடர்பு தொடர்ச்சியானதும் அதிகமானதுமாக இருப்பதால் இது மிகவும் பயன் உள்ள வழிமுறைகளாகும். ஊடகங்கள் வளங்களுக்கும், மக்களுக்குமான உறவை எப்போதும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சாதனமாக மாறும் போது சுதேசிய அடையாளத்தின் விழிப்பு நிலை இயல்பாக மேற்கிளம்பிவிடும்.

வளங்களை இனங்காணுதல், பின் அவற்றை ஆய்வு செய்தல், அவற்றினூடாக அவற்றை பயன்படுத்துதல் என ஒரு முறையும், வளங்களைத் தேடி ஆய்வுசெய்தல், அவற்றை இனம் காணுதல், அவற்றினூடாக அவற்றைப் பயன்படுத்துதல் என இன்னொருமுறையுமாக இரண்டு வழிகளில் நாம் ஈடுபட முடியும். வளங்களைப் பயன் படுத்துதல் எனும் போது அது பற்றிய மிக நுட்பமானதும், கவனிக்கத்தக்கதுமான பல விடயங்கள் உள்ளன. ஏனெனில் ஒரு தேசத்தின் வாழ்வு அதன் வளங்களிலேயே மையமிட்டிருக்கிறது.

வளங்களை இனம் காணுதலில் முக்கியமானது, அவற்றைப் பயன்படுத்துவதுதான். இனங்காணப்பட்ட வளம் மக்கள் தேவைக்காக பயன்படுத்தப்படும் போது வளப்பற்றாக்குறையோ, வளஅழிவோ நிகழ்ந்து விடக் கூடாது. வள மீள் உருவாக்கம், வளப்பேணுகை, வளப்பெருக்கம், வளப்பாதுகாப்பு என்பவற்றில் மிகக்கூடுதலான அக்கறை கொள்ளவேண்டும். வளங்களை இனங்காண்பதிலும், வளப்பிரயோகத்திலும் வளமதிப்பீடு பிரதானமானது.

தொடரும்......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஒரு பையில்
நான்கு சூலில்
உயிரான விக்கிரகங்கள்

ஒரு பொழுதில்
இரண்டு எறிகணைகள்
உயிர் சுவைத்த சக்கைகள்



தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது வீரவேங்கைகளின் நினைவுடன் 06.02.99 அன்று ரொறன்ரோவில் உலகத் தமிழர் இயக்கக் கலை பண்பாட்டுக் கழகம் கனடாக்கிளையினரால் நடாத்தப்பட்ட பொங்கல் விழா



கடந்த 24.01.99 அன்று உலகத் தமிழர் இயக்க மகளிர் அமைப்பினரால் நடாத்தப்பட்ட'விழித்தெழுவோம்' பரப்புரை நிகழ்வின்போது...







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுத்து இலக்கியமாகின்றது

–பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி–

தமிழின் பிரதான மொழி நிலைக் கலைகள் என்று போற்றப்படும் இயல், இசை, நாடகம் ஆகிய அம்சங்களில் ஒன்றான 'இயல்'— இலக்கியம்—பற்றி குறிப்பாக அது இன்று பயிலப்படும் நிலைமை பற்றி நமது சிந்திப்புக்களைத் தெளிவு படுத்திக் கொள்ளல் பொருத்தமென்றே கருதுகின்றேன்.

ஆனால் முதலில் 'முத்தமிழ்' என்ற இந்த எண்ணக்கரு பற்றி ஒரு குறிப்பினைக்கூறுவது அத்தியாவசியம் எனக் கருதுகின்றேன்.

'முத்தமிழ்' என்னும் எண்ணக்கருவில் இயல், இசை, நாடகம் என்பன தனித்தனி அம்சங்களாகக் கொள்ளப்படுவதுண்டு. ஆனால் உண்மையில் 'தமிழின்' நவீனகாலத்துக்கு முற்பட்ட வரலாற்றைப் பார்ப்போமானால் இத்தகைய பிரிநிலை நோக்கு இருந்திருக்க முடியாது என்பது தெரியவரும். இசை இல்லாது இயல் இல்லை. இயலின் இசைதான் யாப்பு. இலக்கியம் 'பாட்டுக்களாகவே' (பாடல்களாகவே) பயின்று வந்தன. இசைக்கு மொழிவேண்டும் தமிழில் நாடகம் என்பது இசையும் இயலும் கலந்த வடிவமாகும்.

முத்தமிழ் பற்றிய மிகப் புராதனமான குறிப்பு பரிபாடலில் வரும் 'தமிழ் மும்மை' என்னும் தொடராகும். அங்கு அது மூன்று தமிழ் அரசுகளான சேர, சோழ, பாண்டியரைக் குறிக்கின்றதா அன்றேல் இயல், இசை, நாடகத்தைக் குறிக்கின்றதா என்பது பற்றிக்கருத்து வேறுபாடுகள் உள்ளன.

தமிழ்நாட்டில் கோயில்கள், கலைகளின் மையமாக மேற்கிளம்பத்தொடங்கவே, குறிப்பாக சமணத்தின் ஒறுப்புவாதத்திற்கெதிராக இம்மூன்றையும் தனித் தனிக் கலைகளாகப் போற்றும் பண்பு தொடர்ந்திருக்கலாமென நான் பிறிதொரு இடத்தில் கூறியுள்ளேன்.

முத்தமிழ் எண்ணக்கருவின் வரலாறு எவ்வாறானதாகிருப்பினும், இன்று அது தமிழின் வளத்துக்கான குறியீடாகி உள்ளது. அது எமது பண்பாட்டுச்சின்னமாகி உள்ளது.

அந்த பண்பாட்டுக் குறியீட்டில் இயல் என்னும் பொழுது நாம் இலக்கியத்தைக் கருதுகின்றோம்.

இலக்கியத்தின் வளர்ச்சியை எடுத்து நோக்கும்பொழுது, நவீனகாலத்திற்கும் நவீனகாலத்திற்கு முற்பட்ட காலத்திற்குமிடையே மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது தெரியவரும் இலக்கியத்தின் சகல அம்சங்களிலும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

1. **இலக்கியத்தை எழுதுபவர் யார்?**
2. **வாசிப்பவர்–கேட்பவர் யார்?**
3. **எவ்வெவ்விடயங்கள் இலக்கியத்தின் பொருளாகின்றன? (அதாவது எவையெவை பற்றி எழுதப் படுகிறது?**
4. **எந்தத் தொழில்நுட்ப அடிப்படையில் இந்த எழுத்து வேலை நடைபெறுகின்றது?**

எனும் விடயங்களை நோக்கும் பொழுது இவை ஒவ்வொன்றிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெரியவரும்.

இந்த மாற்றங்கள் யாவற்றுக்குமான சின்னமாக அமையும் இரண்டு சொற்களை இங்கு நாம் குறிப்பிடல் வேண்டும். அந்த இரண்டு சொற்களும் நவீன காலத்திலும், அதற்கு முன்னரும் இலக்கியகர்த்தாவாக உள்ளவனைக் குறிப்பிடுவதற்கான சொற்களாகும். எழுத்தாளன், புலவன் என்பனவே அவ்விரு சொற்களாகும்.

நவீன காலத்துக்கு முற்பட்ட காலத்திலே தமிழ் இலக்கியத்தைப் பயின்றவனுக்கு பெயர் 'புலவன்.' இன்றைக்கு தமிழ் இலக்கியப்படைப்பாளியாக உள்ளவனுக்கு பெயர் 'எழுத்தாளன்.' 'புலவன்' 'எழுத்தாளன்' என்று கூறும் பொழுது நமது மனக்கண் முன்னே விரியும் ஆளுமைகள் வெவ்வேறானவையாகும்.

இந்த வேறுபாட்டை நாம் விளங்கிக் கொள்ளுவோமானால், கால ஓட்டத்தின் தன்மைகளையும், அந்த ஓட்டம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களின் தன்மைகளையும், நாம் விளங்கிக் கொள்ளலாம்.

இலக்கியத்தை 'எழுத்தாக' நோக்கும் தன்மை அச்சியந்திரம் வந்த பின்னரே ஏற்பட்டது என்பது முக்கியமான இலக்கிய வரலாற்று உண்மையாகும்.



அச்சுமுறைமை எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே 'எழுத்தைக்' காணும் நாம் நம்மை சுற்றிப்பல்வேறு வகையான 'எழுத்துக்கள்' காணப்படுவதை அவதானிக்கலாம்.

செய்திகள்,
அரசுத்தகவல்கள்,
நிர்வாகப்பணிப்புரைகள்,
கட்டுரைகள்,
நாவல்கள், எனப் பற்பல எழுத்து வடிவங்களைக் காணலாம். செய்தியாகவிருந்தாலென்ன நிர்வாகக்குறிப்பாக இருந்தாலென்ன, சிவசங்கரியின் நாவலாகவிருந்தாலென்ன இவையாவுமே எழுத்துக்கள்தான்.

இந்த எழுத்துக்களின் பிரசுரமானது ஒரு கைத்தொழிலாகும். அதாவது எழுத்தின் பிரசுரம் என்பது திட்டவட்டமான ஒரு பொருளாதார முயற்சியாகும். பொருளாதார முயற்சி எனும் பொழுது உலகின் பெரும்பாலான நாடுகளில் அது ஒரு சந்தைப்பொருளாகவே கருதப்படுகிறது என்பது தெரியவரும். ஒரு பொருள் சந்தைப்படுத்தப்படும் பண்டமாகின்ற பொழுது அது கேள்வி, வழங்கல், நெகிழ்ச்சி என்ற பொருளாதார விதிகளுக்குட்பட்டதாகின்றது.

எழுத்து என்னும் இப்புதிய பரிமாணத்தில் இன்னொரு முக்கிய அம்சத்தையும் இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். 'எழுத்து' எனப்படும் பொழுது அது வாசிப்பை உள்ளடக்கி நிற்பதை அவதானிக்கலாம். எழுத்தின் நுகர் நிலை, வாசிப்பு ஆகும்.

வாசிப்புக்கு இன்னொரு பெயர் எழுத்தறிவு ஆகும். இன்றைய நிலையில் வாசிக்கத் தெரியாத ஒருவர் பூரணத்துவம் பொருந்திய பிரஜையாக தொழிற்பட முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. வாசிப்பு இல்லாவிட்டால் இன்றைய வாழ்க்கை பூரணமடையாது.

வாசிப்பின் பிரயோசனத்தினை—பயன்பாட்டை இரண்டு நிலைகளில் உணரலாம்.

அ. தகவல்களை அறிதல்.

ஆ. நாம் தொழிற்படும் சூழலில் உள்ள சிரத்தைகள், கவலைகளிலிருந்து விடுபட்டு நம்முள் ஈடுபடல்.

வாசிப்பின் வளர்ச்சியால் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களை அறிந்து கொள்ளுதல் முக்கியமானதாகும். இப்பொழுது, இங்குள்ள நம்முடைய ஏறத்தாழ தொண்ணூறு வீதத்தினரின் முன்னோர் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுத, வாசிக்கத் தெரிந்த சமூகமட்டத்தினராக இருந்திருக்க முடியாது. அந்த சமூக அமைப்பு அதற்கு விட்டுக்கொடுத்திருக்காது. இன்று நிலைமை அதுவன்று.

இன்று நாம் தமிழர்களாக இருக்கின்றோம் என்றால், அல்லது தமிழ்வழி வரும் மொழியுணர்வை உடையவர்களாக இருக்கின்றோமென்றால் நாம் அதனைச் செயல் நிலைப்படுத்திக் காட்டும் வகையில், தமிழை எழுத, வாசிக்கத்தெரிந்தவர்களாகவே இருக்கின்றோம். இது முக்கியமான மாற்றம் இந்த மாற்றம்—வளர்ச்சி—சனநாயகக் கோட்பாட்டின் வளர்ச்சி காரணமாகவே ஏற்பட்டுள்ளது.

எனவே வாசிப்பு என்பது நமக்கு பன்முகப்பட்ட வளர்ச்சியைத்தந்துள்ளது.

தமிழை எடுத்துக்கொள்வோமேயானால், நாம் தமிழர்களாக இருக்கின்றோம் என்பதன் சின்னமாக அமைவது நாம் தமிழை வாசிக்கக்கூடியவர்களாக இருப்பதாகும். இது இந்நாட்டில் மாத்திரமன்று. கனடாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் போகின்றவர்கள் தங்களுடைய பிள்ளைகளை தமிழ்தெரிந்தவர்களாக வைத்துக்கொள்வதற்கு ஏற்றவகையில் தங்கள் பிள்ளைகளுக்கு அங்கு பல வசதியீனங்கட்கு மத்தியிலும், தமிழை பயிற்றுகின்றனர்.

இந்த விடயத்தை இன்னொரு முறையாகவும் நோக்கலாம். முந்திய காலங்களில் வாசிக்கக்கூடியவர்களாக இருந்தோர் யார்? எழுதக்கூடியவர்களாக இருந்தோர் யார்? முன்பு ஏடுகளை வீடுகளில் வைத்திருக்கக்கூடியவர்கள் யார்?

ஆனால் இன்றைய நிலையோ முற்றிலும் மாறுபாடானது. திருக்குறள் விளங்குகின்றதோ அல்லவோ என்பதல்ல முக்கியமானது. அல்லது, பரிமேலழகர் உரையைத்தான் விளங்கிக்கொள்ள முடியுமா, முடியாது என்பதல்ல முக்கியம். தமிழின் சின்னமாக, தான் தமிழன் என்பதன் சின்னமாக ஒவ்வொரு வீட்டிலும் திருக்குறள் மலிவுப்பதிப்புப் பிரதியாவது இருக்கும். எழுத்தின் சனநாயகப்பாடு மொழியுணர்விற்கு தளமாகின்றது.

இந்த அச்சுப்பெருக்கத்தால், எழுத்தறிவு விரிவால், இலக்கியத்தின் தன்மை மாறியுள்ளது.

இக்கட்டத்தில் உலகமட்டத்தில் இலக்கியம் என்ற சொல்லில் ஏற்பட்டுள்ள மாற்றம்பற்றி சிந்தித்தல் வேண்டும். 'இலக்கியம்' (லிட்ரேச்சர்) என்பது பிரதானமாகப் படைப்பிலக்கியத்தையே குறிக்கும். ஆனால் இன்றோ ஒரு பொருள் பற்றி எழுதப்படுவது எல்லாமே, அதுபற்றிய 'இலக்கியமாகவே' (லிட்ரேச்சராகவே) கொள்ளப்படுவது வழக்கமாகிவிட்டது. ஆங்கிலத்தில் 'சயன்டிபிக் லிட்ரேச்சர்' (Scientific Litraure—அறிவியல் இலக்கியம்) என்பது இன்று பொது வழக்காகி உள்ளது. தமிழில் இவற்றை நாம் குறைந்த பட்சம் 'எழுத்துக்கள்' என்றாவது குறிப்பிடவேண்டிய தேவையுள்ளது.

இங்கு நாம் படைப்பிலக்கியமாக எழுத்துக்கள் பற்றிய நமது கவனத்தை செலுத்துதல் வேண்டும். முன்னர் கூறிய சனநாயகப்பாடு, சந்தைப்பண்ட உற்பத்தி முறை, தொழில்நுட்ப வளர்ச்சி முறை ஆகியன காரணமாக இலக்கியத்தின் அமைப்பு, வடிவம், பொருள் ஆகியவற்றில் பெருமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எழுத்தாளன், பிரசுரகர்த்தா, விநியோகஸ்தன், வாசகன் என இலக்கியத்தின் உற்பத்திமுறைமை ஒரு வரன்முறையான பொருளாதார நடவடிக்கையாகவே மாறியுள்ளது.

இந்த 'உற்பத்திமுறை' யினூடாக எழுத்துக்கள் இன்று வெளிவருகின்றன. படைப்பிலக்கியத்தைப் பொறுத்தமட்டில் இந்த எழுத்துக்கள் இரு பிரதான வகையினவாக உள்ளன.

1. **புனைகதை**
2. **கவிதை**

நாடகம் இதற்குள் வராது. ஏனெனில் அது முற்றிலும் அச்சுச்சாதன மற்றது. இன்னொரு சாதனத்துக்குரியது (அரங்கு). அரங்கிற்கான எழுத்துரு இலக்கியத்தரமுள்ளதாக இருக்கலாம்.

இந்த 'படைப்பு' எழுத்துக்களை நாம் ஏன் வாசிக்கின்றோம் என்பதே முதல் வினாவாகும். அதற்கான பதில் 'அந்த எழுத்து நம்மை ஏதோ ஒரு வகையில் கவர்கின்றது. நம்மை அதன் பால் இழுத்துக்கொள்கிறது' என்பதேயாகும். இக்கட்டத்திலேதான் முக்கியமான வினா மேற்கிளம்புகின்றது.

இந்த 'எழுத்துக்கள்' எப்பொழுது 'இலக்கியமா'கின்றன?

இந்நிலையில் ஒரு தெளிவினை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோசோவா-திமோர்-பாலஸ்தீனம்-தமிழீழம்

**கடந்தவருடம் நவம்பர் 21–27 திகதிகளில் பார்சிலோனாவில் (Barcelona) இடம் பெற்ற அனைத்துலக நிபுணர்கள் மாநாடொன்றில் தேசிய சுய நிர்ணய உரிமையானது அனைத்துலகம் தழுவிய இன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அடிப்படை அம்சம் என்று வலியுறுத்தப்பட்டது. மனித உரிமைச் சட்டங்கள் உட்பட சர்வதேச சட்டங்களினால் வரையறை செய்யப்படும் தேசிய இனங்களின் அடிப்படை உரிமையான சுய நிர்ணய உரிமை அனைத்துலக ரீதியில் பாகுபாடற்ற முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கூறும் பசிலோனாத் தீர்மானம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையிலேயே முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைசெயற்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையைக் கோரியுள்ளது.**



அமெரிக்க ஜனாதிபதி முன்னிலையில் கைகுலுக்கும் இஸ்ரேலிய–பாலஸ்தீனிய அதிபர்கள்




தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான கோட்பாடானது தெளிவாக வரையறை செய்யப்பட்டது. எமது தேசியத் தலைவர் தன் உரைகளில் வலியுறுத்தும் திம்புக் கோட்பாடுகள் இவ் வரையறையின் பிரகடனங்களேயாகும்

தமிழ் மக்களின் இவ் அடிப்படை உரிமையை அங்கீகரிக்கக் கோரும் கோட்பாட்டு நியாயத்தை அண்மைக் கால உலக நிகழ்வுகள் வலுப்படுத்துகின்றன.

கிழக்கு திமோரியர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தோனேசியா அங்கீகரித்துவிட்டது. பாலஸ்தீனம் - ஒஸ்லோ உடன்படிக்கையில் வரையறை செய்யப்பட்ட மே 4ம் திகதிக் காலை எல்லையில் தன்து நாட்டு உரிமையை (Statehood) பிரகடனப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. கோசோவா அல்பேனிய மககள் தமது பிரிந்து போகும் உரிமையை பிரான்சில் இடம் பெறும் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுக்களில் வலியுறுத்துகின்றனர்.

மேற்கூறிய 3 உதாரணங்களிலும் நசுக்கப்பட்ட மக்களின் சுய நிர்ணய உரிமையை மையப்படுத்தியே இணக்கப் பொறிமுறை ஆராயப்படுகின்றது. இவ் இணக்கமானது அதிகாரங்கள் கூடிய சுயாட்சி (Autonomy plus) அல்லது முழுமையான சுதந்திரமென்ற தீர்வுகளுக்கிடையேயே ஆராயப்படுகின்றது.

செரூபியா தான் அடக்கி ஆண்டு வந்த அல்பேனியர்களின் சுயாட்சி (Autonmy) உரிமையை ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டது. இவ் ஆட்சியானது அதிகூடிய அதிகாரங்களைக் கொண்ட அதேவேளை யூகோஸ்லாவியா என்ற நாட்டின் எல்லைகளுக்குள் அடங்கியதாகவும் இருக்கவேண்டும் என்பதே செரூபியர்களின் நிலைப்பாடாகும். மாறாக கொசோவாவின் தலைவர்கள் தமக்குரிய பிரிந்து செல்லும் உரிமையை தேசிய சுயநிர்ணய உரிமைகள் கோட்பாடுகளின் அடிப்டையில் வலியுறுத்துகின்றனர். இணக்கத்தை வலியுறுத்தும் ஐரோப்பிய அமெரிக்க மத்தியத்துவம் 3 வருடகால சுயாட்சித் தீர்வையே இடைக்காலத் தீர்வாக முன்வைத்தது. இதன் அடிப்படையிலேயே அல்பேனியர்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கோரிக்கையை அணுக முனைகிறது. இம் 3 ஆண்டு இடைக் கால கட்டத்தில் யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதியாகவே கொசோவா விளங்கும். எனவும் பிரேரிக்கின்றது. ஆனால் அவ்விடைக்கால ஏற்பாட்டை கண்காணிக்க 25,000 - 30,000 வரைப்பட்ட ஐரொப்பிய அமெரிக்கத் துருப்புக்களை கொசோவாவில் தரையிறக்க மத்தியத்துவ நாடுகள் முயல்கின்றன. இது கோசோவாவிற்கும் யூகோஸ்லாவியாவுக்குமிடையே நடைமுறை ரீதியிலான ஆனால் அங்கீகரிக்கப்படாத பௌதீக எல்லையை வரையறை செய்யுமென செரூபியர்கள் அஞ்சுகின்றனர்.

1989 வரை ஓரளவான சுயாட்சி உரிமையுடன் வாழ்ந்து வந்த கொசோவாவை யூகோஸ்லாவியாவின் செரூபிய அரசு அரசமைப்புத் திருத்தம் ஒன்றின் மூலம் தன் இறுக்கமான பிடிக்குள் கொண்டுவந்தது. இதனை எதிர்த்து கொசோவா மாநிலப் பாராளுமன்றம் பிரிந்துபோகும் உரிமைக்கான முடிவை நிறைவேற்றியது. இது சர்வதேச சட்ட அமைவுக்கு உட்பட்டு தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும். இதனைத் தொடர்ந்து கோசோவா பாராளுமன்றத்தைத் தடைசெய்த செரூபியர்களின் அரசு இராணுவப்பிடிக்குள் கொசோவாவை உட்படுத்தியது. இந் நிகழ்வானது தமிழீழத் தனியரசை முடிவான தீர்மானமாக தமிழர்கள் சட்ட பூர்வமாக முன்வைத்த போது பிரிவினையைக் கோருவது சட்ட விரோதமானது என பாராளுமன்றத்தில் அரசமைப்புச் சட்டதிருத்தத்தை மேற்கொண்டு தேர்வு செய்யப்பட்ட மக்களின் ஆணையை தடைசெய்தமைக்கு ஒப்பான நிகழ்வாகும்.

கோசோவா இணக்கப்பாட்டிற்கான பேச்சுவார்த்தையை பிரான்சில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டை ஒன்றினுள் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரெஞ்சு ஜனாதிபதி, அல்பேனியர்கள் மீதான செரூபியர்களின் இனப்படுகொலை நடவடிக்கைகளை சகிக்க முடியாதது என ராஜதந்திர வார்த்தைகளூடாக சுட்டிக்காட்டியிருந்தார். நீதி கோசோவா மக்களுக்கு கிடைக்கவேண்டும் என கூறியிருந்தார். மேற்குலக மத்தியத்துவ நாடுகளின் பிரதான நிகழ்ச்சித் திட்டமான போர் நிறுத்தம் சுயாட்சித் திட்டம் மனிதாபிமானத் தேவைகளையே முதன்மைப் படுத்திய ஜனாதிபதி சிராக் யூகோஸ்லாவியாவில் கொசோவா மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறையை ஐரோப்பிய சமூகம் ஏற்றுக் கொள்ளாது என்பதை கோடிட்டுக் காட்டினார். தமது கொல்லைப் புறத்தில் அடிப்படை மனித இறைமைக்கு எதிரான முரண்பாடுகள் இடம் பெறுவதை சகிக்க முடியாது என வரையறை செய்துள்ளார். இதனை யூகோசிலாவியாவின் இறைமையில் பிறநாடுகள் மேற்கொள்ளும் தலையீடு என்ற கோட்பாட்டை புறந்தள்ளும் செயற்பாடு எனக் கொள்ளலாம். இது சிறீலங்கா அரசின் சர்வதேச நிலைப்பாட்டுக்கு எதிரான பிரகடனமாக உருவாக்கப்படலாம். தன் நாட்டினுள் இனப்படுகொலைகளை நடாத்திக் கொண்டு இவ் இறைமை பற்றிப் பேசும் சிறிலங்கா அரசு உலகளாவிய மனித இறைமைகள் தொடர்பான முரண்பாட்டில் வாழ்ந்து வருகிறது.



செரூபியர்களால் விரட்டியடிக்கப்பட்ட அல்பேனிய அகதிகள்

கோசோவா - செரூபிய முரண்பாட்டினைக் கையாளும் சர்வதேச ராஜதந்திரம் இராணுவ பலத்தினை பின்புலமாகக் கொண்டுள்ளது. மேற்குலக



இந்தோனேசிய அரசால் இருபது வருடகால சிறைத் தண்டணை விதிக்கப்பட்ட கிழக்கு திமோரிய மக்களின் தலைவர் கொஸ்மோ (Gusmao)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயநிர்ணய உரிமையும் தீர்வும்



தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்திக்கும் சர்வதேச பிரமுகர்கள்

நேட்டோ இராணுவக் கூட்டணியின் அச்சுறுத்தலையே யூகோஸ்லாவியாவை பேச்சு வார்த்தை மேடைக்குக் கொண்டு வந்தது. கோசோவா விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகள் எனவும் அவர்களுடன் பேச மாட்டோம் எனவும் கூறிவந்த செரூபியர்களை பேச வைத்ததும் இதே இராஜதந்திரமாகும். இது இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச தீர்மானம் போன்றே காணப்படுகின்றது.

இம் முயற்சிகளின் பின்னால் ஐரோப்பிய நலன்களும் தேவைகளும் உள்ளனவாயினும் கொசோவா மக்களின் சுயநிர்ணய உரிமையை யூகோஸ்லாவிய அரசின் இறையாண்மை என்ற கோட்பாட்டின் பிடியில் நின்று விடுவித்தமை நம்பிக்கை தரும் விடயமாகும்.

தேசிய சுய நிர்ணய உரிமையைப் பிரயோகிக்கும் மற்றுமொரு தேசிய இனமாக பாலஸ்தீனியர்கள் விளங்குகின்றார்கள். எதிர்வரும் மே 4ம் திகதி ஒஸ்லோ உடன்பாட்டின் கீழ் தமது நாட்டுரிமையை (State hood) பிரகடனப்படுத்தப் போவதாக அதிபர் யாசீர் அரபாத் கூறியுள்ளார். உதவி வழங்கும் நாடுகளின் மாநாடொன்றில் கலந்து கொண்ட அதிபர் அரபாத் பாலஸ்தீனியர்களின் நாட்டுரிமைப் பிரகடனத்தை ஒத்திப் போடுவதற்கான வேண்டுகோள்களை நிராகரித்துள்ளார். பாலஸ்தீனிய - இஸ்ரேலிய அதிபர்களுக்கிடையேயான ஒஸ்லோ உடன்பாட்டின்படி நாட்டுரிமை பற்றிய விடயத்தைத் தீர்மானிக்கும் உரிமை இறுதிக்கட்ட விடயமாக அமைந்துள்ளது. இவ் இறுதிக்கட்டத்திற்கான காலவரைவு மே 4ம் திகதியாக அமைய வேண்டும் ஆனால் இஸ்ரேலிய - சியோனிச சக்திகள் ஒஸ்லோ உடன்பாட்டின் பல்வேறு அம்சங்களை நிறைவேற்ற மறுத்து பல்வேறு இடைக்கால உடன்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன. கடந்த ஒக்டோபரில் வையி உடன்பாடு (Wye river) மேற்கொள்ளப்பட்டது. ஆனால் டிசம்பரில் இஸ்ரேல் அவ் உடன்பாட்டை கைவிட்டது அல்லது இடைநிறுத்தியது.

தற்போது மூல உடன்பாடான ஒஸ்லோஉடன்பாட்டின்படி மே 4ம் திகதி பாலஸ்தீனியர்களின் நாட்டுரிமையை தீர்மானிக்க வேண்டும். ஆயினும் இஸ்ரேலிய - சியோனிச சக்திகளின் தாக்கம் இது பற்றிய கால எல்லையை நீடிக்க முயல்கிறது. பேச்சு வார்த்தைகள் முழுமையாக முடிவடையாததினால் மே 4ல் பாலஸ்தீனியர்கள் தமது நாட்டுரிமையை பிரகடனப்படுத்தக்கூடாது என அமெரிக்கா கூறுகின்றது. எகிப்து காலதாமதத்தை கோருகின்றது. ஆனால் பாலஸ்தீனியர்கள் நாட்டுரிமையை பிரகடனப்படுத்த உரித்துடையவர்கள் என்பதில் எவரும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கவில்லை. முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் சிமென் பெரசும் அமெரிக்க அதிபரின் மனைவி ஹிலரி கிளிங்டனும் இதனை தவிர்க்க முடியாதது என வர்ணித்துள்ளனர்.

தமிழர்களும் நாட்டுரிமையை கொண்டவர்கள். ஐரோப்பிய ஆட்சியாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு ஈற்றில் சிங்கள ஆட்சியாளர்களால் இனப்டுகொலைக்கு உள்ளாக்கப்படும் தமிழர்களின் அடிப்படைஉரிமையான பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரிமை 1977 தேர்தல்களின் மூலம் சட்டபூர்வமாக்கப்பட்டது. எதுவித சனநாயபூர்வ அங்கீகாரங்களுமின்றி ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழம் சனநாய பூர்வமான தீர்மானம் மூலம் விடுதலை பெற முயல்கிறது.

கிழக்கு திமோரியர்களின் பிரிந்து செல்லும் உரிமையை இந்தோனேசிய அரசு அங்கீகரித்தமையானது உலக அரசியலில் இடம்பெறும் இனச்சிக்கல் தீர்வுக்கான மற்றுமொரு எத்தனிப்பாகும். 1975ம் ஆண்டு போர்த்துக்கல் காலனித்துவ அரசு கிழக்கு திமோரை



இந்ததோனேசிய அரசின் இரகசிய ஆயுதக் குழுக்கள்

விட்டு வெளியேறிய சில நாட்களில் இந்தோனேசியா தனது துருப்புக்களை அனுப்பி ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது. இன்று வரை 200,000 திமோரிய மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளக்கப்பட்டனர். 1996ல் கிழக்கு திமோரியர்கள் விடுதலைக்காக குரலெழுப்பிப் போராடிய இரு தலைவர்களான ஆயர்கார்லஸ் பெலோ (Cerlos belo), ஜோஸ் ரமோஸ் கொர்ட்டா (Jose ramos horta) ஆகியோர் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றபோது இம்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான குரலானது உண்மையில் சமாதானத்துக்கான குரல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த 26-01-1999 புதிய இந்தோனேசிய அரசின் வெளிவிவகார அமைச்சர் கிழக்கு திமோரியர்களுக்கு அதி உச்ச சுயாட்சியை (Autonomo plus) அல்லது பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரிமை வழங்கப் போவதாக அறிவித்தார். இதனை சனநாய பூர்வமான நாகரிகமான முடிவு என அவர் கூறினார். இவரது இவ் அறிவிப்பை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பணிமனை அமெரிக்க பிரித்தானிய அரசுகள் உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்றன.

இவ் அறிவிப்பானது கிழக்கு திமோரை ஆக்கிரமிப்பதற்கான போரில் இந்தோனேசியா் தோல்வியுற்றதைக் காட்டுவருகினறனர். இவ் இரகசிய ஆயுதக் குழுக்களை தனது குழுக்களாக ஏற்றுக் கொள்ள இந்தோனேசியா மறுத்து விட்டது.

இன்று கிழக்குத் திமோரிற்கு கூடிய சுயாட்சியைத் தருவதாக இந்தோனேசியா அறிவித்துள்ளது. ஆனால் ஒரு பொதுசன வாக்கெடுப்பு மூலம் கிழக்கு திமோரியர்கள் எதை விரும்புகின்றார்கள் என்பதை முடிவு செய்யுமாறு திமோரியர்களும் அவர்கள்ள ஆதரிக்கும் போர்த்துக்கல்லும் கேட்டுக் கொண்டுள்ளது. ஐ.நா. சபையின் இணக்கப் பேச்சாளர் ஒரு பூரண சுயாட்சி தொடர்பாக இந்தோனேசிய போர்த்துக்கல் அரசுடன் பேசி வருகின்றார்.

இச் சிக்கல்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயம் திமோரியர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை எதிரி அ்ரசு அங்கீகரித்தமையாகும். தீர்வுக்கான மூலப் பொறிமுறையாக இச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பயன் படுத்துகின்றன.

இங்கு ஆராயப்பட்ட 3 விடயங்க்ளிலும் ஏற்பட்டுள்ள சர்வதேச பிரக்



செரூபியப் படைகளினால் 15.01.99 அன்று ரசக் எனும் இடத்தில் 45 அல்பேனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்

கின்றது என நோபல் பரிசுபெற்ற ஜோர்ஸ் ரமோஸ் வர்ணித்தார்.

இந்தோனேசியா இவ்வாறு பகிரங்கமாக கிழக்குத் திமோரியர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தமையானது தந்திரோபாய ரீதியான முயற்சி என்றுதான் திமோரியர்கள் கருதுகின்றார்கள். உலகளாவிய ரீதியில் தமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை பெற்றுள்ள ஆதரவை நிராகரிக்க முடியாத அரசு உத்தி ரீதியாக இதனைப் பாவிக்கமுற்படுவதாக திமோரியர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

தற்போது கிழக்கு திமோர் அதீதமான இந்தோனேசிய குடியேற்ற வாசிகளால் நிரம்பி வழிகின்றது.

1975ல் கிழக்குத் திமோரில் 97 வீதத்தினர் திமோரியர்கள் 2 வீதம் சீனர்கள் ஆனால் தற்போது 78 வீதத்தினரே திமோரியர்கள் 20 வீதத்தினர் கடந்த 20 வருட காலங்களாக குடியேற்றப்பட்ட இந்தோனேசியர்களாவர். பல இரகசியமான அரச ஆதரவு ஆயதக் குழுக்களை இந்தோனேசிய இராணுவம் உருவாக்கி கிழக்கு திமோர் பூராவும் பரவவிட்டுள்ளது. தனிநாடு பற்றிப் பேசும் திமோரியர்கள் படுகொலை செய்யப்பட்டு அல்லது விரட்டப்பட்டு

**— நாதன் —**

ஞையானது, நீண்டநெடிய போராட்டங்களுக்கூடாகவும் புவிசார் முக்கியத்துவங்களூடாகவும் ஏற்படுத்தப்பட்டன. இம் 3 தேசியங்களும் தம் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இழப்புக்கள், துன்பங்களின் மத்தியிலேயே வலியுறுத்தி வந்தனர். இம் 3 தேசிய இனங்களும் பலம் மிக்க எதிரிகளுடனான தமது போரை பிரிந்து போகும் - தன்னைத்தானே ஆளும் சர்வதேச உரிமையின் அடிப்படையிலேயே வலியுறுத்தினர்.

இன்று தமிழ் சிங்கள முரண்பாட்டுக்கான பேச்சுத் தொடர்பாக சர்வதேச இணக்கமும் பிரக்ஞையும் ஏற்பட்டு வருகின்றது.

அமெரிக்கா உள்ளிட்ட பல தரப்பினர் இப் பேச்சுக்களுக்கு ஒத்தாசை புரியத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப் பேச்சுக்களுக்கான மூலப் பொறிமுறையாக தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையே விளங்குகின்றது. தமிழர்கள் நாம் சேர்ந்து வாழ்வதா அல்லது பிரிந்து வாழ்வதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டவர்கள் என்பதே எமது தேசியத் தலைவர் முன்வைக்கும் பிரதான கோட்பாடாகும். தமிழர்கள் திமோரிய, பாலஸ்தீன, அல்பேனிய மக்களுக்கு நிகரான மன உறுதியுடன் போரை நடத்துபவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









லெப். நிருபரன்/ நிரு
**இரத்தினசிங்கம் யோகேந்திரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

(23.12.1998 அன்று காலை 7மணியாளவில் மட்டக்களப்பில் உள்ள தவச்சுங்கேணி பாலத்திற்கு காவலுக்கு வந்த இராணுவத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழும்புண் அடைந்திருந்து 24.01.99 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

10.01.1999 அன்று திருமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் இராணுவச் சுற்றிவளைப் பின்போது சயனைட் அருந்தி 3 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண் டுள்ளார்கள்.

வீரவேங்கை அன்பு வடிவேல்
**கணேசபிள்ளை கிருஸ்ணராசா**
யாழ் மாவட்டம்

வீரவேங்கை காவலன்
**நடேசன் சேகர்**
ஒட்டிசுட்டான்

வீரவேங்கை கரன்/ சுமன்
------
யாழ் மாவட்டம்

27.01.1999 அன்று அம்பகாமத்தில் இராணுவத் துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 2 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.

வீரவேங்கை சொரூபன்
**பொன்னுத்துரை மனோகரன்**
மன்னார் மாவட்டம்

வீரவேங்கை உதயகீதன்
**பழனிஐயா சிவகாந்தன்**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை கேசவன்
பத்மநாதன் பகீரதன்
மட்டக்களப்பு மாவட்டம்

(25.02.1998 அன்று மாங்குளம் பகுதியில் இராணுவத்து டன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்து 27.01.1999 அன்று வீரமரணம் அடைந்துள்ளார்.)

வீரவேங்கை சுகிர்தராஜ்
**சிவலிங்கம் குகன்**
மட்டக்களப்பு மாவட்டம்

(28.01.1999 அன்று ஒட்டிசுட்டானில் இராணுவத் துடன் ஏற்பட்ட நேரடிமோதலின் போது வீரச்சா வைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

வீரவேங்கை காயத்திரி
**மாணிக்கம்பிள்ளை தேவமதி**
மட்டக்களப்பு மாவட்டம்

(29.01.1999 அன்று மாங்குளப் பகுதியில் இராணு வத்துடன் ஏற்பட்ட மோதலின் போது வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

29.01.1999 அன்று இரவு 11 மணியளவில் முல்லை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது 3 கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.

மேஜர் வேங்கை
**இராசையா நாகேஸ்வரி**
யாழ். மாவட்டம்
த/மு இலுப்பைக்கடவை, மன்னார்

மேஜர் கவியரசன்
**முத்தையா சிங்கராஜ்**
கிருஸ்ணபுரம், கிளிநொச்சி

மேஜர் சாந்தகுமார் / ஆதித்யன்
**ஜெயராசா ஜேம்ஸ்பாண்ட்**
எட்டாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

30.01.1999 அன்று காலை 6.30 மட்டக்களப்பு ஏறாவூர் மாங்கேணியிலிருந்து 800 மீற்றர் தொலைவில் அமைந் துள்ள இராணுவக் காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்ட போது ஏற்பட்ட நேரடி மோதலிலும் 10 போராளிகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.

கப்டன் சோமன்
**நவரட்ணம் கேதீஸ்வரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

கப்டன் ஜமுனாகரன்
**கந்தவனம் மோகன்**
மட்டக்களப்பு மாவட்டம்

லெப். ஐக்கியராஜன்
**குணசேகரன் பரமேஸ்வரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

2ம் லெப்.ரேகா காந்தன்
**லோகேந்திரன் ரவிசங்கர்**
மட்டக்களப்பு மாவட்டம்

2ம் லெம். அண்ணாமலை
**கந்தப்பொடி குதாகலன்**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை திருநாமம்
**சவுந்தரராஜா நவநீதன்**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை ஜெயதேவன்
**குணசீலன் ஜெயகாந்தகுமார்**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை மாமுரளி
**கோபாலபிள்ளை பேரின்பம்**
அம்பாறை மாவட்டம்

வீரவேங்கை தமிழவன்
**வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

★ ஒரு போராளியின் விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

31.01.1999 அன்று பரந்தன் பகுதியில் இராணுவத் துடன் ஏற்பட்ட மோதலில் 2 போராளிகள் வீரச்சா வைத் தழுவிக்கொண்டுள்ளார்கள்.

வீரவேங்கை தாயாரதி
**தங்கராஜா சீதா**
கொழும்பு
த/மு- மட்டக்களப்பு

வீரவேங்கை வெற்றிச்செல்வி
**பரமு வசந்தி**
வவுனியா

05.02.1999 அன்று அம்பகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் 2 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

வீவேங்கை ஜீவராஜ்
**முரகமூர்த்தி அழகன்பன்**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை மாங்கிளியன்
**நடராசா அமிர்தராசா**
மட்டக்களப்பு மாவட்டம்

03.02.1999 அன்று யாழ். வடமராட்சி கப்பூது பகுதியில் இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கியதில் 2 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

வீரவேங்கை மாணிக்கம்
**செல்வரஞ்சலிங்கம் முகுந்தன்**
யாழ். மாவட்டம்

த/மு:- சிவபுரம் வவுனிக்குளம் - மல்லாவி

வீரவேங்கை தற்பரன்
**செல்வரட்ணம் பிரதீப்குமார்**
யாழ். மாவட்டம்

8-2-99 அதிகாலை கச்சதீவிற்கு அண்மையில் சிறி லங்கா கடற்படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது 13 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

மேஜர் ரூபன்ராஜ் அல்லது மேனன்
**கந்தசாமி குணாளன்**
கிளிநொச்சி

வீரவேங்கை ஒளிநிலவன்
**பாலசுப்பிரமணியம் மோகனதாஸ்**
பரந்தன்

வீரவேங்கை நகுலன்
**முருகவேல் கணதீபன்**
யாழ். மாவட்டம்

வீரவேங்கை நாவரசன்
**செல்லையா சுதந்திரராஜா**
கிளிநொச்சி

வீரவேங்கை சுந்தர் / வண்ணன்
**வில்வரத்தினம் சசி அல்லது அழகன்**
யாழ். மாவட்டம்

வீரவேங்கை கண்ணன்
**நல்லலிங்கம் நாகராஜா**
யாழ். மாவட்டம்

வீரவேங்கை கடலரசன்
**சுப்பிரமணியம் முகுந்தன்**
கிளிநொச்சி

வீரவேங்கை அகவொலி
**சந்தானம் அந்தோனி பார்த்தீபன்**
அலம்பில்

வீரவேங்கை இசைஅமுதன்
**கயம்பு புவனேந்திரன்**
வவுனியா

வீரவேங்கை வேலவன்
**மகேந்திரம் ஞானச்செல்வம்**
யாழ். மாவட்டம்

வீரவேங்கை தமிழ்நேயன்
**சிவலிங்கம் சிவனேசன்**
புதுக்குடியிருப்பு

வீரவேங்கை கந்தப்பன்
**சபேஸ்ரியன்பிள்ளை தேவேந்திரன்**
கிளிநொச்சி

வீரவேங்கை ரூபன்
**அருளானந்தம் நிமலதாஸ்**
யாழ். மாவட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாத்திரம் அறிந்து பிச்சை போடு!

வடமேல் மாகாணசபைத் தேர்தல், சிறீலங்காவைப் பொறுத்தவரை தேர்தல் வன்முறையில் ஒரு வரலாற்றையே படைத்திருக்கின்றது என்றே கொள்ளப்படுகின்றது. முன்புபோலல்லாமல் இம்முறை வன்முறைக்கட்சி கொடிகட்டிப்பறந்தது என்பதே பொதுவாக எல்லோரதும் முடிவாகியிருக்கின்றது. இருபது வீதமான வாக்களிப்பு நிலையங்களில் மீள வாக்களிப்பு நடைபெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முழுத் தேர்தலும் மீள நடத்தப்பட வேண்டும் என எதிர்கட்சியினர் வலியுறுத்துகின்றனர். அதற்கிடையில், சந்திரிகா அரசோ முதலமைச்சருக்கு முடிசூட்டுவிழாவையே நடத்திமுடித்துவிட்டிருக்கின்றது. போதாக்குறைக்கு நடத்த தேர்தலின் மூலம் மக்கள் தமது

சனநாயகப் பணியை செவ்வனே செய்திருக்கின்றார்கள் என்றும், ஆளும் கட்சியில் மக்கள் கொண்ட பெரும்நம்பிக்கையின் தீர்ப்பே இது எனவும் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைப் புகழ்ந்து தள்ளுகின்றனர்.

என்னதான் சந்திரிகா அரசு, தேர்தல் முறைகேடுகளால் பெற்ற வெற்றியை தனக்குரிய புகழாரமாகக் கொண்டபோதும், நாட்டுமக்களைப்போல் உலகநாடுகளும், இந்த முறைகேடுகள் வன்முறைகள் குறித்து ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் கொண்டுள்ளன.

சந்திரிகா அரசை சாட அவை தவறவில்லை. அமெரிக்கா உட்பட பிற நாடுகள் தமது அதிருப்தியை வெளியரங்கமாகவே வெளிப்படுத்தின.

இதுதான் சந்திரிகா அரசாங்கத்திற்கு பிடிக்காத ஒன்றாகிவிட்டது. விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் அடக்கவும் உலகநாடுகளின் ஆதரவை நாடிநிற்கின்ற சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளை பயங்கரவாதப்பட்டியலில் சேர்க்குமாறு உலகநாடுகளுக்கு சதா வேண்டுகோள்விடும் சந்திரிகா அரசு, தமிழீழ மக்களின் விடுதலைக்கான பங்களிப்பை, தமது உடன்பிறப்புக்களின் நல்வாழ்வுக்கான பங்களிப்பை பயங்கரவாதத்திற்கான நிதிப்பங்களிப்பாக உலகநாடுகளில் சித்தரிக்க முனையும் சிறீலங்கா அரசு, தன்னை நோக்கிய கண்டனங்கள் அபிப்பிராயங்கள் உலகநாடுகளிடம் இருந்து வந்துவிட்டால் எம்பிக்குதிக்கின்றது.

தேர்தல் வன்முறைகள் குறித்து உலகநாடுகள் தெரிவித்த அதிருப்திக்கு, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகம் சுடச்சுட சூடாக அறிக்கை வெளியிட்டுள்ளது. தேர்தல் வன்முறைகள் குறித்து அபிப்பிராயம் தெரிவித்திருப்போரை, தமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவோர் என்ற பாணியில் எச்சரிக்கவும் தலைப்பட்டது சிறீலங்கா அரசு.

ஆக தமது வன்முறை வெறியாட்டங்களை, சனநாயக விரோதப் போக்குகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதே, உலகநாடுகளுக்கு சந்திரிகா அரசு தெரிவிக்கும் செய்தியாக உள்ளது.

கேட்கும்போது உதவி செய்யுங்கள். பணமாகவோ இராணுவ உதவிகளாகவோ, கடனாகவோ பிற வழிகளிலோ உதவி செய்யுங்கள் ஆனால், எமது விடயத்தில் தலையிடாதீர்கள். இது உள்நாட்டு விவகாரம் என்பதை சந்திரிகா அரசு அழுத்தி உச்சரித்திருக்கின்றது.

சந்திரிகா அரசுடன் எதிர்கட்சிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது என்பதால், வெளிநாடுகள் கூடுதல் ஆர்வத்தை இதுவிடயத்தில் காட்டக் கூடும். ஏனெனில் மாறிமாறி ஆட்சிக்குவரக்கூடிய கட்சிகள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இதுவிடயத்தில் அவற்றின் நலனும் சார்ந்திருக்கின்றது. ஆகவே அவற்றின் 'சனநாயகக்' கவலை எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

**என்ன தான் சந்திரிகா அரசு, தேர்தல் முறைகேடுகளால் பெற்ற வெற்றியை தனக்குரிய புகழாரமாகக் கொண்ட போதும், நாட்டுமக்களைப் போல் உலகநாடுகளும், இந்த முறைகேடுகள் வன்முறைகள் குறித்து ஆழ்ந்த கவலை யையும் கண்டனத்தையும் கொண்டுள்ளன.**

தமிழீழப் பகுதியில் சந்திரிகா அரசு புரிந்துவரும் பயங்கரவாதச் செயல்கள் குறித்து மனித விரோதச் செயல்கள் குறித்து மிக மோசமான சனநாயகப்படுகொலைகள் குறித்து கவலைகொள்ளாத, அதிகமாக அலட்டிக்கொள்ளாத உலகநாடுகள், வடமேல் மாகாணசபைத் தேர்தல் வன்முறைகள் முறைகேடுகள் குறித்து அதிகம் அலட்டிக்கொள்கின்றனவே என்ற கேள்வி மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்களைப்போல் தமிழ்மக்களிடமும் எழுவது இயல்பானதே.

தமிழீழப் பகுதியிலே, தினமும் படுகொலைகள், துப்பாக்கிச் சூடுகள், ஆட்கடத்தல்கள், கைதுகள், பாலியல் வன்முறைகள், நில ஆக்கிரமிப்புக்கள், அடாத்தான சட்டங்கள் என, சிங்களத்தின் கொடூரப்பிடியில் தமிழினம் சிக்கிக்கிடக்கின்றது. தமிழீழப் பகுதியிலே இராணுவ ஆட்சியே நடக்கின்றது.

இவற்றை ஏன் உலகம் கண்டு கொள்ளவில்லை என்ற கவலை தமிழ்மக்களிடம் இருக்கவே செய்கின்றது.




ஒரு இனத்தின் உணர்வுகள், அதன் உரிமைக்குரல், அதன் அபிலாசைகள், வாழ்தலுக்கான உரிமை என்பன நசுக்கப்படுகின்றன. அதன் நாளாந்த தேவைகள் கூட இராணுவச் சட்டங்களால் மறுக்கப்படுகின்றன. பௌத்தசிங்களப் பேரினவாதத்தால் தமிழினம் சிறிது சிறிதாக அழிக்கப்படுகின்றது. ஆனால் இவற்றைக் கண்முன்னால் கண்டும்கூட, நன்கு அறிந்தும்கூட இவற்றைத் திறம்படச் செய்ய சிறீலங்கா அரசிற்கு இராணுவ உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் இராணுவ ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் வழங்கும் நாடுகள், இந்த வடமேல்மாகாண தேர்தல் முறைகேடுகள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டிருப்பது குறித்து தமிழ்மக்களுக்கு வியப்புக்கலந்த ஒருவிதமான மனஉணர்வு மேலிடவே செய்யும்.

வெளிநாடுகளின் அதிருப்தி இவ்விதம் இருக்க, அதிருப்தி தெரிவித்ததற்காக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகம் கண்டனம் தெரிவித்திருப்பதும் ஒருபுறம் இருக்க, இந்தச் சிக்கல்களுக்குள், சிறீலங்காவின் உதவிகேட்டு நடத்தும் பயணமும் இதனால் பாதிக்கவே செய்யும்.

பாத்திரம் அறிந்து பிச்சை போடுவதென்பது அன்றும் இன்றும் என்றும் பொருத்தமுள்ளதாகவே இருக்கும். இதைத்தான் வெளிநாடுகளும் உதவிவழங்கும் விடயத்தில் கடைப்பிடிக்கின்றன. தமிழர்கள் மீது இன அழிப்பை நடத்துகின்றது என்று சிறீலங்கா அரசு மீது உதவிவழங்கம் நாடுகள் எவ்வளவுதூரம் கண்டனம் தெரிவிக்கின்றனவோ தெரியவில்லை. ஆனால் தென்பகுதியிலாவது ஒரு ஸ்திரத்தன்மையை, பிரச்சினைகளற்ற அமைதி நிலையை அவை வலியுறுத்துகின்றன. அதற்கு குந்தகமான காரியங்களைக் கண்டிக்க முனைகின்றன. தட்டிக்கேட்க விளைகின்றன. உதவிகளுக்கு நிபந்தனைகளை விதிக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் சந்திரிகா அரசு அடங்கியே போகவேண்டும். வேண்டாத சிலுசிலுப்புக்கள் வில்லங்கமாய்ப் போய்முடியும். ஆக கதிர்காமரின் அமைச்சகம் கண்டன அறிக்கை விட்டாலும், எதிர் காலத்தில் அடக்கி வாசிக்க கடமைப்பட்டவராகவே கதிர்காமர் இருப்பார். இல்லாது போனால், அவரது உலகஉலாவின் நோக்கங்களுக்கு பாதகமான பேறுபேறுகளே கிடைக்கும்.

தவறு செய்துவிட்டு குட்டு வாங்கும் சிறுவனைப்போல, சிறீலங்கா அடக்கியெ வாசிக்க வேண்டும். குட்டு வாங்கியும் தவறு தொடர்ந்து தவறு செய்கின்ற குழப்படிக்காரச் சிறுவனாகவே சிறீலங்கா தொடர்ந்தும் இருக்கப்போவதால், பாத்திரம் அறிந்து பிச்கைபோடுதல் என்ற நடைமுறை சிறீலங்காவிற்கச் சரிதானா என்பதை உலக நாடுகள் சரி பார்த்துக்கொள்வதே நல்லது. உலகநாடுகள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடத் தேவையில்லை என்று அறிக்கைவிட்ட கதிர்காமர் இன்னும் ஒரு சில மார்தங்களில் பிச்சைப் பாத்திரம் ஏந்திப் பவனி வரவுள்ளார். பாத்திரத்தை உரசிப் பார்ப்பதே உதவி எண்ணங் கொண்ட நாடுகளின் கடமை.

— சுப்பு —




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கணப்பொழுது



லெப். கேணல் மதனா

வீதியின் இருமருங்கிலும் நீண்டு வளர்ந்த மரங்களூடாகவே அடர்ந்த பற்றைக்குள் இருந்து விழிகளை மட்டும் உயர்த்தி எதிரியவன் படையை எட்டிப்பார்த்து அவனின் அசைவில் காத்திருக்கும் திடம் கொண்ட போராளிகளுள் ஒருத்தியாய் லெப். கேணல் மதனாவும். 1991ம் ஆண்டு வாகனேரியில் இருந்து வெலிக்கடை நோக்கி வந்த பொலிஸ் ஜீப்வண்டி மீது புலிகளின் அதிரடித்தாக்குதல் நடைபெற்றது. இது அவளுக்கு முதல் களமாக இருந்த போதும், மிகவும் திறமையாக சண்டையிட்டு பல இராணுவத்தினரின் இறப்புக்குக் காரணமாக இருந்தாள். அன்றிலிருந்து இவள் கண்ட களங்கள் ஏராளம். கிழக்கில் நடைபெறும் ஒவ்வொரு தாக்குதல்களிலும் பங்கெடுத்து சிங்கள அரச படைகளின் அழிவுக்கும் வழிசமைத்தாள். இவளது துணிவையும், சுறுசுறுப்பையும், எமது விடுதலைப்போராட்டத்தை முழுமையாக புரிந்தும், தெளிவான சிந்தனையுடனும் செயலாற்றிய மதனாவை, வயதில் சிறியவளாய் இருந்த போதும் எமது மட்டு. அம்பாறை சிறப்புத்தளபதி அவர்கள், அன்பரசி படையணியின் சிறப்புத்தளபதியாக நியமித்தார். அன்போடு கிள்ளைமொழி பேசி, தன் பிள்ளைகளை மகிழ்விப்பதில் மதனாவுக்கு நிகர் வேறு யாருமில்லை. தாய்க்குத் தாயாகவும், சகதோழியாகவும், களத்தில் இவள் படைநடாத்தும் தளபதியாகவும் நின்று பிள்ளைகளை வழிநடாத்திக் கொண்டிருந்தாள். இவளுக்கு சகதோழியருடன் சேர்ந்து விளையாடுவதென்றாலே அலாதி பிரியம். பின்னேரம் நான்கு மணியாகி விட்டால் தனது படையினரை முகாமில் தங்கவே விடமாட்டாள். புற்போல், வொலிபோல், கிரிக்கட் ஆகிய விளையாட்டுக்களில் சகதோழியர் அனைவரையும் ஊக்கப்படுத்தி தானும் சேர்ந்து விளையாடுவாள். இதனால் சண்டையில் இழப்புக்களினால் ஏற்பட்ட மனக்கவலையை எல்லோருக்கும் சமநிலைப்படுத்தி விடுவாள். கிழக்கு மாகாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் வாகரை, இதுதான் அவள் பிறந்த இடம். ஓங்கி அடித்து அலை உயர, அதனுள் நின்று கரையோர மணலை எல்லாம் கையால் கிண்டி விளையாடும் இவள், நாகேந்திரம் பூமணி தம்பதிகளின் ஏழு பிள்ளைகளுள் நான்காவது பிள்ளையாகப் பிறந்து மிகவும் செல்லமாக வளர்ந்தாள்.

எட்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் போது எங்கு பார்த்தாலும் சுயநலப் பேய்களின் அட்டூழியம் கண்டு, தாங்க முடியாதவளாய் 1990ம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து, மட்டக்களப்பு முதலாவது பயிற்சிப்பாசறையில் பயிற்சியும் பெற்றாள். 1993 இறுதியிலிருந்து 1994 வரை புலிகளின் பலத்தைச் சிதைக்கும் நோக்குடன் சிறீலங்காப்படைகளின் அட்டகாசம் கிழக்குக் காடுகளில் அதிகரித்தன. புலிகளின் உணவு விநியோகப் பாதைகள் மறிக்கப்பட்ட போது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு மூன்று நாளுக்கு ஒரு கஞ்சி என்ற நிலை புலிகளுக்கு ஏற்பட்டது. ஒரு வருடமாக இந்நிலை நீடிக்கப்பட்ட போது போராளிகள் எழுந்து நிற்கவும் சக்தியற்றவர்களாக வந்து விட்டனர். அப்போது மதனா மட்டும் அன்பு வார்த்தை கூறி பிள்ளைகளை அரவணைத்து ஆறுதல் அளிப்பாள். "நாம் செயலிழந்தால் எதிரியின் பலம் அதிகரிக்கும்" என்பதே அவளின் கருத்து. அவளும் பசி அறியாதவளல்ல. இதைப் பொருட்படுத்தாதவளாய் பிள்ளைகளுடன் கூடியிருந்து தாளம் போட்டு பாட்டுக்கள் பாடி அனைவரையும் மகிழ்விப்பாள். பல தடவைகள் எதிரியினால் எமது முகாங்கள் சுற்றி வளைக்கப்பட்ட போது, தளபதிகளின் உதவியுடன் வீரமாக நின்று போரிட்டு முற்றுகையை முறியடித்தவள். "இன்றோ நாளையோ நான் வீரச்சாவடையலாம், அதற்கிடையில ஒருதடவையாவது தலைவரை நேரில் பார்த்து விட வேண்டும்" என்பது அவளுடைய நீண்டநாள் அவா. எப்படி சந்தோசமாக பழகியபோதும் இந்த வேதனை மட்டும் அவள் மனதை விட்டு அகலவில்லை. கிழக்கில் ஓரளவு நிலமைகள் சீரடைந்ததும், கட்டுமுறிவு இராணுவ முகாம் அழிப்பு, தரவை இராணுவமுகாம் அழிப்பு எனப் பல இராணுவ முகாம் தாக்குதல்கள் இடம் பெற்றன. எல்லாவற்றிலும் முழுமையான பங்கெடுத்து எதிரியை முற்றுமுழுதாக விரட்டியடித்த சந்தோசம் அவளுக்கு. அப்படி இருக்கும் போது தான் 1996 நடுப்பகுதியில் வட தமிழீழம் வந்தபோது அவளுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஒன்று காத்திருந்தது.

அவள் தலைவரை நேரில் கண்டு தலைவரின் மனதிலும்



இடம் பிடித்துக்கொண்டாள். "இனி நான் வீரச்சாவடைந்தாலும் பிரச்சினையில்லை" என்று அடிக்கடி கூறுவாள். கிழக்கில் எத்தனையோ போராளிகள் தலைவரை காணாமலே வீரச்சாவடைந்துள்ளனர். அவர்களின் இறுதிஆசை கூட, ஒருமுறையாவது தலைவரை காணவேண்டும் என்பதுதான். இந்த விதத்தில் மதனா கொடுத்து வைத்தவள். தன்னைப்போல் தன் பிள்ளைகளும் தலைவரை சந்திக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டவள், மீண்டும் கிழக்கிற்கு சென்று கொண்டிருந்தாள். அப்போது புலுகுணாவ முகாம் அழிப்பிற்கான பயிற்சிகள் நடைபெற்றன. புலுகுணாவ வெற்றிச் சமரில் புலிகளின் வீரம் கண்டு எதிரி அதிர்ந்தான். படைபலம் முழுவதும் புலிகளிடம் வீழ்ந்தன. அதில் மதனாவும் தனது படையணியுடன் பெரும் பங்காற்றியவள். அதன் பின், பல பதுங்கித்தாக்குதல்களில் மதனா பங்கு கொண்டாள். கிழக்கு மாகாணத்திலே இவள் பாதம் படாத இடமே இல்லை என்று தான் சொல்லவேண்டும். அந்தளவிற்கு நேருக்கு நேர் நின்று களத்தில் எதிரியை ஓட ஓட விரட்டியடிப்பாள் மதனா. 05.03.97 அன்று 350ற்கு மேற்பட்ட கஜபாகு விசேட படையினர் நிலைகொண்டிருந்த வவுணதீவு ஆக்கிரமிப்பு இராணுவத் தளம் மீதான தாக்குதலில் இவளுக்கும் ஒரு பகுதி கொடுக்கப் பட்டது. அதிகாலை 0145 மணிக்கு சண்டை ஆரம்பிக்கப்படுகிறது. தொடர்ந்து 6மணி நேர உக்கிர சண்டை. நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் திகிலடைந்த எதிரி பரவலாக ஓடுகின்றான். துரத்தி அடித்து, மதனா தன்னுடைய பகுதியை கிளியர்பண்ணி முன்னேறி விட்டாள். "அம்மான் என்ர பகுதி பிடித்தாச்சு" வோக்கியில் உற்சாகத்துடன் அவள் குரல் ஒலித்தது. அந்த நேரத்தில்தான் அந்த சோகநிகழ்வு ஒன்று நடந்தது. கூவிச்சென்று வெடித்த ஷெல் ஒன்று மதனாவின் உயிரையும் பறித்துக்கொண்டது. சிறிது நேரத்தில் வோக்கியில் மதனாவின் தொடர்பு அற்றதும் அந்த பேரிடி எல்லோர் மத்தியிலும் பரபரப்பானது. மதனா வீரச்சாவடைந்து விட்டாள். ஓடிச்சென்று பார்த்த போது அவளது உயிரற்ற உடலை சுமந்தபடி இன்னும் ஒரு தோழி வந்து கொண்டிருந்தாள். ஆம். தான் தன் அன்பரசி படையணிக்கு ஒரு பகுதி தரவேண்டும் என்று அடம் பிடித்து, அதைப்போலவே சாதனையையும் நிலை நாட்டிய பெருமையுடன் அன்னை மடியில் துயில்கின்றாள். ஆம். நாலாம் முற்சந்தி இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த கப்டன். அன்பரசி, இவளும் ஒரு சுறுசுறுப்பான போராளி. கிழக்கில் மகளிர் படையணியை வளர்ப்பதற்கு மதனாவின் தோளோடு தோள்நின்று உதவியவள். அன்பரசியின் அந்த அயராத சேவையின் நிமித்தமாகவே மதனா தன் படையணிக்கு அன்பரசி படையணி என பெயரிட்டு, தன் வீரத்தை செயலில் காட்டி, தன்னையும் இம் மண்ணிற்கு அர்ப்பணித்து விட்டாள்.

புன்னகைமாறா புரட்சி தீபம் எம்மைவிட்டு மறைந்து விட்டது. ஒருவராலும் அவளது வீர மரணச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றாலும், தியாக தீபங்கள் மண்ணில் விதைபட, விடுதலை வித்துக்களாய் அது நாளை விருட்சமாகும் என்ற நம்பிக்கையில் தோழியர் அவளின் தடம் பதித்து செல்கின்றனர். இவளோடு வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 92 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூர்ந்து கொள்கின்றோம்.

◘◘◘

போராளி- செ.சக்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புறப்படுவார்கள்

**முல்லைக் கோணேஸ்**

வளவைச் சுற்றிய வேலிக் கரையில் பனையும், சமண்டலையும் நெடுநெடுவென்று வளர்ந்திருந்தது. பின்வேலியோடு ஆரம்பித்த வயல்வெளி எண்ணுக் கனக்கற்ற ஏக்கர் நிலங்களாய் விரிந்து கொண்டே போனது.

அம்மாவுக்கு, ஆச்சியாக்கள் கொடுத்த சீதனத்தில வயற்காணி மட்டும் பத்து ஏக்கருக்கு மேல வருமென்று அம்மா அடிக்கடி கூறுவா. அதோட சேர்த்துப் பிறகு அப்பா, அருகருகாய்க் கிடந்த ஆனைக் காட்டை வெட்டி இருபது முப்பது ஏக்கருக்கு குறையாமல் சேர்த்தவராம்.

வளவு காணி மட்டும் ரெண்டரை ஏக்கர். எல்லாம் இளம்பிள்ளைத் தென்னைகள். முற்றத்தில் முருங்கை நின்றது. ஆச்சி செத்துப் போன போது முருங்கையின் கீழ் வைத்துத்தான் குளிப்பாட்டினார்கள். அப்பு எத்தனையோ வருசங்களுக்கு முந்தி இறந்து விட்டிருந்தாராம். அப்புவின் ஞாபகமாக ஒரு சார்மனைக் கதிரை மட்டும் இருந்தது. நல்ல கறுப்பு நிறம்.

சிமெந்துத் தரையோடு கிடுகுக் கூரை மால். மத்தியான வெய்யிலும் சிலு சிலுவென்றிருக்கும். அருவி வெட்டிச் சூடடித்தால் மால் நிறைய நெல்லுச்சாக்கு, சிறுபோகத்துக்காய் ஒதுங்கியது போக, எஞ்சியது சாப்பாட்டுக்கென அப்பா கூறிவிடுவார்.



நெல்லுச்சாக்கு இல்லாத மாலை எப்போதுமே பார்த்சதில்லை.

நெல்லுக் குற்றுவதற்கு நாலு காணி தள்ளி இருக்கும் சந்தானம் ஆச்சியும், அவளது பேத்தியும் வருவார்கள். சந்தானம் ஆச்சி கரு கருவென்றிருப்பாள். அவளது உடல் மட்டும் கருங்காலிக் கட்டையென வைரம் பாய்ந்ததென்று அவளே பெருமையாகக் கூறி கண்களைச் சுருக்கிச் சிரிப்பாள். அதில் இறைவனைக் காணலாம் போல் இருக்கும். சந்தானம் ஆச்சியின் பேத்தி மட்டும் நல்ல அழகாக இருப்பாள். அவளது அந்த வயதா, அல்லது அவளது பேச்சா, அல்லது பார்வையா அத்தனை வசீகரத்தைக் கொடுத்தது என்பதை நான் சில வேளைகளில் தனிமையில் இருந்து சிந்தித்தது உண்டு. அவள் நெல்லுக் குற்றும் போது பாவமாக இருக்கும். அம்மா இடையிடையே தேநீர் கொடுப்பா. வியர்வையைத் துடைத்து விட்டவாறே அதைச் சுவைத்துக் குடிப்பார்கள்.

அவர்கள் மலை நாட்டிலிருந்து ஒரு இனக்கலவரத்தின் போது விரட்டியடிக்கப்பட்டு எங்கள் ஊருக்கு தஞ்சம் புகுந்தார்கள். மலைநாடு பற்றியும், லயத்து வாழ்க்கையின் சிரமங்கள்பற்றியும், மாடாய் உழைத்தும் மனிதன், அடிமையாய் வாழும் அவலங்கள் பற்றியும். சந்தானம் ஆச்சி வீட்டுக்கு வரும்போதெல்லாம் கதை கதையாய்ச் சொல்லுவாள்.

அப்போது எங்களூரை நினைக்கப் பெருமையாக இருக்கும். அவர்கள் வேலை முடிந்து போகும்போது குற்றிய கூலியாக நெல்லையே வாங்கிக் கொண்டு போவார்கள்.

சித்திரைக்காற்று ஆரம்பிக்கும் போது, களனிகளெங்கும் உழவு நடக்கும். சிறுபோக விதைப்புக்காய் உழவியந்திரங்களும் எருமைகளும் அதிகாலை வயல்நோக்கி விரையும்.

நிலம் வெடித்து மணல் மேவிக் கிடந்த வாய்க்காலில் திரும்பவும் நுரைதள்ளியபடி புதுவெள்ளம் ஓடும். சிறுவர்கள் தண்ணீரில் பாய்ந்து குதூகலிப்பர். மருதமரக் கிளையில் இருந்து தலைகீழாய் குதித்து முங்கிமுங்கி எழுவர்.

பச்சைப் புறாக்கள் பசுந்தளிர் கிளைகளுக்குள் 'குறு' குறுவென்று தலைகாட்டும். குக்குறுப்பாச்சான்கள் ஒன்றையொன்று போட்டிபோட்டுக் கொண்டு கத்துவது ஊரெங்கும் ஒலிக்கும்.

தம்பி மனோவும், சுகிர்தனும் பக்கத்து வீட்டு தனுவையும், சசியையும் கையைப் பிடித்து கூட்டிச் சென்று, தண்ணீர் சுழித்துக்கொண்டு பாயும் அழகை கைகொட்டி ரசித்துக் கொள்கிறார்கள். மாலைவேளைகளில் முற்றத்து முருங்கை மரத்தின் கீழ் மணல்வீடு கட்டியும், தேங்காய் சிரட்டையில் கறிசோறு சமைத்தும் வளைந்திருந்து சாப்பிடுகிறார்கள். அப்பாவும், அம்மாவும் தூரயிருந்து குழந்தைகளின் விளையாட்டை ரசிக்கின்றனர். அம்மாவை விட மனோவுக்கும் சுகிர்தனுக்கும் அப்பாவின் மேல் தான் அதிகம் பிரியம்.

இரு தோளிலும் அவர்களை சுமந்துகொண்டு அப்பா கோவலன் கூத்து ஆடுவார். அப்படி அப்பா செய்தார் என்றால் சந்தோசமாக இருக்கிறார் என்று அர்த்தம்.

எல்லாம் எல்லாமே எப்போதோ எம்மை விட்டுப் போனது. யெஜசிக்குறு படை எங்கள் ஊருக்குள் புகுந்த போது அப்பாதான் முதல் பலி. அப்பா!.. எங்கட அப்பா! எங்கட அருமையான அப்பா எங்களை விட்டுப் போனபோது தம்பி மனோ சிறியவனாக இருந்ததால், பிரிவுத் துயர் அவனை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. ஆனால் சுகிர்தன் துடித்துப் போனான். சதா அப்பாவின் கனவுகளோடே வெதும்புகிறான். அம்மா சலனமற்ற நீரின் பரப்பாய் இயங்குகிறாள். அவளைப் பொறுத்தவரையில் அப்பா இறந்து போனபிறகு எதிலுமே பிடிப்பற்ற ஜட வாழ்க்கைதான். எங்கள் ஊர் மனிதர்களற்ற, ஆனால் மனிதவெறியர்கள் நிறைந்த சுடுகாடாய் மாறிப் போனது.

நரபலி கொள்ளும் பிசாசுகள் நாளுக்கு நாள் எங்களூரின் அழகை அழித்துக் கொண்டே, கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணத்திற்குத் தரை வழிப்பாதை திறப்பதெனக் கூறிய படி அல்லாடுகின்றன.

குழந்தைகளின் சிறுமனல் வீடுகள் சிப்பாய்களின் சப்பாத்துக்கால்களுக்குள் நசிபடுகிறது. அவர்களது கனவுகளை களவாடிக் கொண்டே இராணுவம் கிராமத்தில் நிலை கொள்கிறது.

குழந்தைகள் திரிந்த கிராமத்துத் தெருக்களில், உயிர்பறிக்கும் இராணுவடாங்கிகளும், கவசவாகனங்களும் கூட்டம் கூட்டமாய் நகரும் ட்ரக் வண்டிகளும் வடக்கு நோக்கிப் படையெடுக்கின்றன. பதுங்கு குழிகளும், காவலரண்களும் நிறைந்த பூமியாகிறது.

எங்களூரின் அமைதியும் அழகும் இத்தனை விரைவாய் கரைந்து போகுமென்று யாரும் நினைத்ததில்லை.

அழிந்து போன ஊரை யாரும் எளிதில் மறந்து விடமுடியாது. எங்களூர் எரியுண்டு பொலிவிழந்து உருமாறிப் போயினும், குழந்தைகள் தாங்கள் கட்டிய மணல் வீடுகள் காற்றோடு கலைந்து அழிந்து போயிருப்பினும் அந்தச்சுவடுகளை அள்ளிக்கொள்ள அவர்கள் புறப்படுவார்கள். தங்களது ஆன்மாக்கள் ஆயிரமாயிரம் கற்பனைகளோடு அந்த ஊரின் வீதிகளில் அலைவதை அவர்கள் தாகத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் தெருக்களில், பள்ளிகளில், வாய்க்கால் வயல்நிலங்களில் மீண்டும் தங்கள் பாதம் படும்வரை புறப்படுவார்கள். ஒருவர் பின் ஒருவராய் புறப்படுவார்கள்.

பச்சைப்புறாக்களும், குக்குறுபாச்சான்களும் மீண்டும் வேலிக் கரைகளில் நிற்கும். நெடுமரக் கிளைகளுக்குள் தாவித்திரியும் வரை, சந்தானம் ஆச்சியும் பேத்தியும் எங்கள் ஊருக்குத் திரும்பும்வரை, அவர்கள் புறப்படுவார்கள்.

சுகிர்தன்...-மனோ...-தனு... சசியென ஒவ்வொருவராய்..

◆◆◆

## வாழ்வா

ஆமியின் ஆட்சிக்குள் வாழ்கின்றோம்
இல்லையில்லை இப்படித்தான்
வெளியே கூறிவிட்டு உள்ளே
செத்துக் கொண்டிருக்கின்றோம்
என் சிரிப்புக்கள், சந்தோசங்கள்
எல்லாம் எங்கே? ஆம்
யாழைவிட்டுப் புலிகள் போன அன்றே
இவற்றையும் தொலைத்தது
நன்றாக ஞாபகமிருக்கிறது
இவற்றை மீட்கவே போராளியானான்
அண்ணா – வீட்டிற்கு வருவதுண்டு
அண்ணாவாயல்ல திருடனைப் போல
அன்று வீதியில் பெருங்கூட்டம்
நானும் நெருங்கினேன் – ஐயோ
என்னிதயம் நொருங்கியது.
அண்ணா பிணமாக – அழமுன்
அவன் கூறிய வார்த்தை செவிகளுள்
என் பிணத்தோடு உறவிருந்தாலே
தங்கைக்குத்தான் ஆபத்து
விழிநீர் வழியை மறித்த போதும்
விரைந்தேன் வீட்டிற்கு – அருகில்
பெற்றோரிருந்தும் அநாதைப் பிணமாக
அண்ணா வீதியிலேயே
சீ..... இதுவும் ஒரு வாழ்வா

- கலைநிலா (தமிழீழம்)

www.tamilarangam.net



## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியாறு

**தொடர்ச்சி...**

பிரிட்டிஷ் புலனாய்வுப் பிரிவு போலந்து எல்லையைக் கடந்து வந்துகொண்டிருக்கும் இந்த 500 பேரைப் பற்றி எப்படியோ அறிந்து, அதை வைற்ஹோலில் இருந்த வெளியுறவு காரியாலயத்துக்கு அறிவித்தது. வைற்ஹோல் உடனடியாகவே பிரேக்கிலிருந்த பிரிட்டிஷ்தூதுவருக்கு, செக்கோஸ்லாவாக்கிய வெளியுறவு மந்திரி மசாறிக்குடன் இவ் விடயம்பற்றி ஆராய்ந்து, புகையிரதத்தைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கும்படி பணிப்புரையை அனுப்பியது. உடனடியாகவே, மசாறிக்கைச் சந்திக்க அவகாசம் வழங்கப்பட்ட பிரிட்டிஷ் தூதுவர், யூதர்கள் எல்லோரும் போலந்துக்குள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என வாதிட்டார்.

இந்த முயற்சி முழுவதுமே சட்டவிரோதமானது என்றும், போலந்துச் சட்டத்துக்கு விரோதமானதென்றும், பலஸ்தீனப் பிரச்சினையில் தங்கள் சார்புத் தீர்வை வலியுறுத்த சியோனிஸ்டுகள் ஆதரவளித்து நடாத்தும் நிகழ்ச்சியென்றும் வர்ணித்தார்.

மசாறிக் புன்னகை செய்தார். "எனக்கு எண்ணெய்க் குழாய்த் தொடர்களை அதிகம் தெரியாது, தூதுவர் அவர்களே. ஆனால் மனித குழாய்த் தொடர்கள் பற்றி நன்கு தெரியும் (Human Pipelines)." மசாறிக் யூதர்களுக்காக வெளிப்படையாகவே கதைப்பவர் என்பது தெரிந்தேயிருந்தது. பிரிட்டிஷாரின் அதிருப்தி வேறு முறைகளில் "நடைமுறைகளில் வெளிப்படலாம்" என்று தூதுவர் வலியுறுத்த முயன்றார்.

"தூதுவர் அவர்களே, பிரிட்டிஷாரின் இந்தப் பயமுறுத்தலுக்கோ அல்லது வேறு பயமுறுத்தலுக்கோ நான் பயப்படப் போவதில்லை. செக்கோஸ்லாவாக்கியாவின் வெளியுறவு மந்திரியாக நான் இருக்கும் வரை எனது நாட்டின் எல்லைகள், கடவுச்சீட்டுக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பிரயாண அனுமதி இருந்தாலும், இல்லாவிட்டாலும் யூதர்களுக்காகத் திறந்திருக்கும்" என்றார் மசாறிக்.

தூதுவர், புகையிரதத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என வைற்ஹோலுக்கு அறிவித்தார். புகையிரதம் ஹங்கேரி, செக்கோஸ்லாவாக்கியா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் எல்லைகள் ஒன்றாக சேரும் பிராட்டிஸ்லாவா (Bratislava) நகரை நோக்கி உருண்டது.

மீண்டும் பிரிட்டிஷார் புகையிரதத்தை நிறுத்த முயன்றனர். ஆனால், இம்முறை அனுதாபம் கொண்ட ஒரு அமெரிக்க ராணுவக்கொமாண்டரின் நேரடிப் பாதுகாப்பின் கீழ் ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது.


மிக அவசியமாகத் தேவைப்பட்ட ஓய்வுக்காகவும், வைத்திய கவனிப்புக்காகவும் வியன்னாவில் பிரயாணிகள் தரித்தனர். அவர்களுக்கு, ஐரோப்பாவின் தப்பிப்பிழைத்த யூதர்களுக்கு உதவும் முகமாக, அமெரிக்க யூதர்கள் ஏற்பாடு செய்திருந்த பிரமாண்டமான மீளப் பயணப்படுத்தல் முகாமொன்றில் புதிய ஆடைகள் வழங்கப்பட்டன. அடுத்ததரிப்பிடமான இத்தாலியிலே மக்களினதும், அதிகாரிகளினதும் பகிரங்கமான ஆதரவு மொசாட்அலியா பெற்றுக்கு கிடைத்தது. ஆனால் பிரிட்டிஷார் நிலைகொண்டிருந்த காரணத்தால் நடவடிக்கைகளில் சிறிது தடையேற்பட்டது.

நம்ப முடியாவிட்டாலும்கூட உண்மையாகவே, இத்தாலியில் நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் படைகளில் பலஸ்தீனிய யூதர்களைக்கொண்ட பிரிவுகள் இருந்தன. பிரிட்டிஷ் இராணுவத்தின் பலஸ்தீன பிரிகேட்டும், இத்தாலியில் வைக்கப்பட்டிருந்த அதன் படைப்பிரிவுகளும் வெகுகாலமாகவே "முன்மாதிரித் துருப்புகளாக"பிரிட்டிஷ் இராணுவத் தலைமைப் பீடத்தினால் கணிக்கப்பட்டிருந்தனர். அலியா பெற்றின் அங்கத்தவர்கள், இவர்களுடன் கலந்திருந்தனர். விரைவில் இந்தப் பிரிவுகளின் பலஸ்தீனிய போர்வீரர்கள் அகதிகள் முகாம்களை அமைப்பது, சட்டவிரோதக் கப்பல்களை ஏற்பாடு செய்வது போன்ற விடயங்களில் உதவி செய்யத் தொடங்கினார்கள். உத்தியோக பூர்வமாக இந்தப் படைப்பிரிவுகள் இராணுவ அதிகாரிகளால் தலைமைதாங்கப் பட்டாலும், நடைமுறையில், அலியாபெற்றும், பால்மாக்குமே இவர்களுக்கு ஆணை பிறப்பித்து வந்தனர். சிம்சன் பார்ட்றொர், இப்படியான படைப்பிரிவொன்றில் இராணுவ சார்ஜன்ற்றாக (Army Sergeant) கடமையாற்றி வந்ததோடு, தனது இராணுவ ஆவணங்களை, போலந்துக்கு போக வரவும், யூதர்களைக் கண்டுபிடித்துக் கூட்டிவரவும் தாராளமாகப் பாவித்தான்.


டொவ் இருந்த ஒச்விற்ஸ் அகதிகளின் குழு இன்னொரு புகையிரதத்தில் ஏறி, ஆஸ்திரிய அல்ப்ஸ் (Austrian Alps) பகுதிக்குள் நுழைந்து, பிரென்னர் கணவாய்க்கூடாக (Brenner Pass) இத்தாலிக்குள் நுழைந்தபோது இங்கு இளவேனிற் காலமாக இருந்தது.

புகையிரதம், மிலானுக்கு (Milan) வெளியே, கொமோ (Lake Como) வாவிக்கு அருகே ஒரு தனிமையான தரிப்பிடத்தில் நின்றது. பிரிட்டிஷ் இராணுவ சீருடைகளில் இருக்கும் ஆட்கள் அவர்களைச் சந்திப்பார்கள் என்று ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தாலும் குழப்பம் அடையவே பார்த்தார்கள்.

'ஸ்டார் ஓவ் டேவிட்' சின்னத்தைக் கைகளில் அணிந்தபடி போரிடும் சீருடைகளில் இருக்கக்கூடிய யூதர்களை அகதிகளால் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. 'ஸ்டார் ஓவ் டேவிட்' எப்போதும் சேரிகளின் இலச்சினையாக இருந்து வந்தது. கடந்த இரண்டாயிரம் வருடங்களில், யூதசேரியில் நிகழ்ந்த எழுச்சியின் போது தவிர, 'ஸ்டார் ஓவ் டேவிட்' இலச்சினையின் கீழ் போரிட்டிருக்கவில்லை.



அவர்கள் பயத்துடனேயே புகையிரதத்தில் இருந்து கீழே இறங்கினார்கள். இந்தப் போர் வீரர்கள் கருணையுடன் பழகினார்கள். சிலர் யிடிஷ் (Yiddish—வழக்கத்திலிருக்கும் யூதமொழி) மொழியைப் பேசினார்கள். எல்லோருமே ஹிப்ரூ மொழியைப் பேசினார்கள். எல்லோரும் அன்போடு நடந்துகொண்டார்கள். ஆயினும், அவர்கள் வேறு வித்தியாசமான வகை யூதர்களைப் போல் தெரிந்தார்கள்.




மிலானுக்கு வந்து ஒரு வாரத்துக்குப் பின், ஒரு நள்ளிரவில் டொவ் இருந்த குழுவில் இருந்த நூறு பேரும் அவர்களிருந்த சிறிய முகாமிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்கள் பலஸ்தீனிய பிரிகேட் அங்கத்தவர்களால் செலுத்தப்பட்ட பிரிட்டிஷ் இராணுவ ட்றக் வண்டிகளில் எடுத்துச் செல்லப் பட்டனர். இவர்கள் கரையோரமாக இருந்த இரகசிய சந்திப்பிடமொன்றுக்கு விரைந்து கூட்டிச்

**லியோன் யூறிஸ்**

செல்லப்பட்டனர். அங்கே வேறு முகாம்களிலிருந்து வந்திருந்த வேறு முந்நூறு அகதிகளைச் சந்தித்தனர். அருகில் இருந்த லா ஸ்பெசியா (La Spezia) துறைமுகத்திலிருந்து ஒரு சிறிய கப்பல் அவர்களைச் சந்திக்க வந்துகொண்டிருந்தது.

இந்தக் கப்பல் கரையிலிருந்து சிறிய தூரத்தில் நங்கூரமிட்டது. ரப்பர், படகுகளைக் கொண்டு அக்கப்பலில் ஆட்களை ஏற்றினார்கள். இந்தக் கப்பல் பயணப்பட்டு, 3 மைல் எல்லையைக் கடந்தது. விரைவிலேயே எப்போதும் விழிப்புடனிருக்கும் பிரிட்டிஷ் கடற்படையினால் தொடரப்படலாயிற்று.

"கேற்ஸ் ஓவ் சியோன்" (Gates of Zion — சீயோனின் கதவுகள்) ஐப் பற்றி ஏதோ குழப்பம் இருந்தது. மற்ற கப்பல்களைப்போல் இக்கப்பல் பலஸ்தீனத்தை நோக்கிச் செல்லவில்லை. மாறாக, அதனுடைய செல்வழி, பிரான்சின் தென் கரையோரமிருந்த லயன் குடா (Gulf of Lion) நோக்கி இருந்தது. பிரிட்டிஷாரோ அல்லது கப்பலில் ஏறியிருந்த அகதிகளோ இக்கப்பலானது ஒரு பெரிய திட்டத்தின் பகுதியென்று கனவிலும் நினைக்கவில்லை. திருத்தப்பட்டது.

### அத்தியாயம் இருபத்திஏழு

மேரிலான்டில் இருக்கும் பால்டிமோரின், மில்லர் சகோதரர்களின் உணவகத்தின் ஒரு மேசையில் பில்பிறை உட்கார்ந்திருந்தான். ஒரு பெரிய கோப்பை நிறைய நீராவிக்கக்கியபடியே இருந்த கிளாம் சவ்டருக்குள் மட்டிச்சதை கலந்த பிஸ்கட்டுக்களை போட்டுக் கலக்கினான். கோப்பைக்குள் இருந்த சூப்பை சிறிது கலக்கி விளையாடினான். பசி இருக்கவில்லை. 'இயேசு கிறிஸ்துவே!' அந்தச் சிறிய கப்பலை என்னால் அத்திலாந்திக்குக் குறுக்காக கொண்டு செல்ல முடியுமா என யோசிக்கிறேன், எனத் தானே நினைத்துக் கொண்டான்.

மொசாட் அலியா பெற்றின் தலை சிறந்த கப்பல் கப்டன் என்ற பெய ரைப் பில்பிறை சம்பாதித்திருந் தான். ஸ்டார் ஓவ் டேவிட்டை, செசாறியா கடற்கரையில் கொண்டு போய் தரைதட்டப் பண்ணியதன் மூலம் சட்டவிரோதக் குடியேற்றப் போரில் புதிய யுகத்தைத் தோற்றுவித்திருந்தான். அது சைப்பிரஸ் தடுப்பு முகாம்களை ஆரம்பிக்கப் பிரிட்டிஷ்ரரைக் கட்டாயப் படுத்தியது.

இது திருப்புமுனையாக அமைந்ததோடு, பிரிட்டிஷார் திருப்பி அனுப்பும் அதே வேகத்தில் கப்பலுக்குப் பின் கப்பலாகப் பலஸ்தீனத்துக்குள் யூதர்களை மொசாட் அலியா பெற் அனுப்பிக் கொண்டிருந்தது. தற்போது புதிய பிரச்சினை ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. சைப்பிரசின் முகாம்கள் நிரம்பி வழியும் அளவிற்கு அலியா பெற் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களை அனுப்பிக் கொண்டிருந்தது.

**தொடரும்...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

ஏமாற்றாதே ஏமாறாதே. ஏ..மாற்றாதே ஏ...மாறாதே. பலமுறை கேட்ட சினிமாப்பாடல். சந்திரிகா அரசாங்கம் கடந்த மாதம் நடத்தி முடித்த தேர்தல்களின் மகத்துவத்தை கண்ட சர்வதேச உலகு சந்திரிகாவை நோக்கி இந்தப் பாடலைத் தான் பாடுகின்றது. சமாதான தேவதை எனவும் ஜனநாயகத்தின் காவலன் எனவும் சந்திரிகா தன்னையும் தன் அரசாங்கத்தையும் சர்வதேச உலகிற்கு பரப்புரை செய்து தனது சமாதான விருப்பை ஜனநாயக ஆர்வத்தை விடுதலைப்புலிகள் தான் சீர்குலைப்பதாக பொய்யுரை செய்து வந்தார். இதனால் சந்தை விஸ்தரிப்பிற்காக தேச அரசுகளைத் தேடும் சர்வதேச நாடுகளும் சந்திரிகாவுக்கு முண்டு கொடுத்தால் அவர் யுத்த சூழ்நிலையை மாற்றி விடுவார் தமது சந்தைத் தொடர்புகள் வேகமும் விரிவும் பெறும் என தம்மாலான உதவிகளைச் சந்திரிகா வுக்கு செய்யமுற்பட்டன. ஆயினும் தற்பொழுது சர்வதேச நாடுகள் சந்தை தொடர்புகளுக்கு தடைகளை விளைவிக்க கூடிய செயல்களை சிறிலங்கா அரசாங்கமே தலைமை தாங்கி நடத்தி அதன் எதிர்விளைவு களை உண்டாக்குகின்றது என்ற உண்மையை நன்கு உணர்ந்து வருகின்றன.

ஜனநாயக அரசு என்பதற்கு இரண்டு முக்கியமானவை. ஒன்று சுதந்திரமான தேர்தல் முறைமை. அடுத்தது சட்டமும் ஒழுங்கும். இரண்டினதும் சுதந்திரமான செயற்பாட்டை அழித்தொழித்து குறுக்கு வழிகள் மூலம் வன்முறைகள் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதையே இலக்காக கொண்டு செயற்படுவது சிங்கள பௌத்த பேரினவாதம். இந்தச் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிறுவுவதையே தனது அரசியல் செயற்திட்டமாக கொண்டு செயற்பட்டு வரும் சந்திரிகா நேற்று தமிழர் தாயகத்தில் ஒரு தேர்தல் நாடகமாடி அதனை முறைமையான தேர்தல் என உலகிற்கு அறிவித்து தமிழ் மக்களின் விருப்புக்கு (Conscnsus) எதிராகத் தனது ஆயுதப்படைகளுக்கு குற்றேவல் செய்யும் சில தமிழ்க் கூலிக்குழுக்களின் தலைமைளுக்கு மக்கள் பிரதிநிதித்துவ பட்டம் சூட்டி உலகைப் பேய்க்காட்டியதும் அல்லாமல் தனது பாராளுமன்ற அரசியல் தலைமைக்கும் முண்டு தடிகள் சேர்த்துக் கொண்டார். அப்பொழுது இது ஜனநாயகப் படுகொலை என்று தமிழ் மக்கள் சுட்டிக்காட்டிய பொழுது மௌனமாக இருந்த உலகு இன்று அதே வழியில் தனது ஆட்சிக்கு முண்டுத் தடிகள் சேர்ப்பதற்கு சந்திரிகா நடத்திய மகாணசபைத் தேர்தல்களில் தமிழர்கள் அன்று கூறியதின் உண்மைத் துவத்தை தெளிவாக இனங்கண்டு கொண்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் தான் தனது அரசாங்கம் வன்முறைகளில் ஈடுபடுவதாக சர்வதேச உலகிற்கு பரப்பரை செய்து வந்த சந்திரிகாவின் முகமூடியை நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்கள் கிழித்தெறிந்து விட்டன. சந்திரிகா அரச்ாங்கத்தின் ஜனநாயகம் என்றால் என்ன என்பதை உலகு இனங்காணத் தொடங்கியதின் முதல் அடையாளமாக இலங்கைத்தீவில் உள்ள பல வெளிநாட்டுத் தூதுவர்கள் நடந்து முடிந்த தேர்தலின் ஜனநாயகத் தன்மையின் போலித்தனத்தை பகிரங்கமாகவே கண்டித்துள்ளனர். மலத்தை அப்புறப்படுத்தும் பொழுது அதில் உட்கார்ந்து மகிழும் இலையான் பதறித் துடித்து மேலே பறந்து வட்டமடிப்பதைப் போல சந்திரிகா அரசாங்கத் தின் தேர்தல் வன்முறைகளை கண்டித்த தூதுவர்களுக்கு விளக்கமளித்து கடிதங்களை எழுதித்தள்ளி வருகிறார் கதிர்காமர். ஆனாலும் கதிர்காமரின் ஒக்ஸ்வோட் மூளையினாலும் ஒட்டுப் போட முடியாத அளவுக்கு சந்திரிகா அரசாங்கத்தின் ஜனநாயக முகமூடி நடந்து முடிந்த தேர்தல் வன்முறைகளினால் கிழிந்து தொங்குகின்றது. இது குறித்து விமர்சனம் செய்த வெரித்தாஸ் வானொலி செய்தியாளர் டும் டும் டும் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு வெளுத்துப் போச்சுது டும் டும் டும் என்று வர்ணித்தமை குறிப்பிடத்தக்கது. உலகப் பிரசித்தி பெற்ற எக்னோமிக்ஸ் சஞ்சிகை சந்திரிகாவின் தேர்தல் வன்முறைகளைக் கண்டித்துள்ளது. இவைகள் எல்லாம் இனி சந்திரிகாவும் இலக்ஷ்மன் கதிர்காமரும் சர்வதேச உலகை பேய்க்காட்ட முடியாத நிலை உருவாகி விட்டதை தெளிவாக உணர்த்துகின்றன. கதிர்காமர் ஆலாய் பறந்து கட்டிய சர்வதேச பிரச்சாரக் கோட்டைகள் எல்லாம் கிடுகிடுக்கத் தொடங்கியுள்ளதைக் கண்டு பதறிக் கொண்டிருக்கும் சந்திரிகாவுக்கு சிறிலங்காப் பத்திரிகை கள் அடிக்கடி விடுதலைப்புலிகளின் வான்படை குறித்து பல்வகைப்பட்ட கட்டுரைகளை கருத்துக்களை வெளியிட்டு வருவது வயிற்றில் புளியைக் கரைப்பதாக உள்ளது. ஏனெனில் யார் எதைக் கூறினாலும் தமிழீழத் தேசத்தின் கடற்பிரதேசமே அதிகமானது. அக்கடற்பிரதேசத்தின் சர்வதேச பரப்பினதும் தமிழீழப்பரப்பினதும் பாதுகாப்பை மேற்கொள்ளும் வலிமை தமிழீழக் கடற்புலிகளுக்கு உண்டு. அதனால் தமிழீழத் தேச மக்களுடனான உறவுகள் குறித்து சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலைக்கு சர்வதேச நாடுகள் வந்துள்ளன. இனி தமிழீழ வான் பரப்புக் கட்டுப்பாடும் தமிழீழ அரசான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் வலிமை பெற்று வருகின்றன. ஆதலால் சிறிலங்கா விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன சர்வதேச நாடுகள் தமிழீழ அரசுடனான தங்கள் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இதனை உடைத்தெறிய புதிய தளபதியாக சிறிலால் விஜயசூரியாவை சந்திரிகா நியமித்துள்ளார். இவர் ரத்வத்தையின் முக்கிய எதிர்ப்பாளர்களில் ஒருவர் அதனால் சந்திரிகா தனது கையை ஓங்கவைத்துள்ளார் என்பது சிலரின் கருத்து. ஆனால் ஜயசிக்குறுய் களத்தில் ஒரு கட்டத்தில் தோல்வி கண்டு பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து ஒளித்து பெண்களின் சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டு ஓடி உயிர் தப்பியவர் இவர். இவர் எதைச்சாதிக்கப் போகின்றார் என்பது ரத்வத்தை ஆதரவாளரின் கருத்தாக உள்ளது. எது எப்படியிருப் பினும் தமிழ் மக்களின் உயிரைக்குடிப்பதில் எல்லோருமே ஒரே மாதிரியாகவே செயற்படத் துடிப்பர் என்பது நாமறிந்த உண்மை. அதனை தடுக்கும் எங்கள் விடுதலைப்புலிகளின் பலத்தை நாம் பெருக்க பெருக்க சிறிலங்காவின் அனைத்து ஆக்கிரமிப்பு முயற்சிகளும் தோல்வியடையும் என்பதே எமது அனுபவம். இதில் எமது பங்களிப்பை சரிவரச் செய்து கொண்டு சர்வதேச சமூகத்தடன் சேர்ந்து நாமும் ஏமாற்றாதே ஏமாறாதே. ஏ..மாற்றாதே ஏ...மாறாதே. எனச் சந்திரிகாவை நோக்கி பாட வா!.

அன்பின் ஆசிரியர்
(05.02.1999)

## லெப். கேணல் பொன்னம்மான் உட்பட 9 மாவீரர்களின் 12ம் ஆண்டு வீரவணக்கம்

14.02.1987 - 14.02.1999



பறவைகள்
வீரிட்டுக் கத்தின
வெளியில் அந்தரித்து
இறக்கை அடித்து
திசையின்றிப் பறந்தன.. .. ..

கண்ணீர் சிந்திய படி
நொருங்கிய இதயங்களோடு
மக்கள்
தெரு வீதியால் ஓடினார்கள்

வாழைமரத் தோப்புகளுக்குள்
துப்பாக்கிகளோடு நின்ற தோழர்கள்
ஒரு கணம் தலைசாய்த்தார்கள்

மீண்டும்.. .. .. ..
அவர்கள் தலை நிமிர்த்திக்
கொணட போது
இழந்த தோழர்கள்
எப்படி மறுபிறப் பெய்தினார்கள்
தெரியுமா?
அதே முகங்கள்
அதே புன்னகைகளோடு

அந்தோ!
கட்டாந்தரைகளில்
புல் வெளிகளில்
காடுகளில்
கடற்கரைகளில்
இருந்து
கரங்கள் வலியதாகி
வலியதாகி எழுகின்றதே.

## பரிவுடன் வந்த 'பரிகள்'



சுட்டெரிக்கும் சூரியனின்
கொடூர வெய்யிலில்
நீர் வற்றி நிலம் வரண்டது
வேர்கருகி மரங்கள்
வதங்கின.

பாதங்களை வீதியிலே
வைக்க
உறவுகள் பயந்திருந்த
வேளையில்
பரிவுடன் வந்த 'பரிகள்'
பிரிவுத்தாகத்தால்

தவித்தவர்களை
சுமந்து சென்றன

தணிணீர்த்தாகம் தணிந்தது?
ஆனால்
சென்றவர் குறைந்தனர்
செம்மணியில் அவர்கள். . . .

இப்போது புரிகிறது
வந்தது பரிகளல்ல
நரிகளென்று.

தயாமதி தமிழீழம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெண்திரைகளில் வரலாற்றுப் புகழ் மிக்க இரு பெரும் சமர்கள்

சிறிலங்கா அரசின் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கைக்கு எதிரான விடுதலைப்புலிகளின் ஓராண்டுச்சமர் 1997.05.13 - 1998.05.12




உலகின் புருவங்களை உயரவைத்த சமர் ஓயாத அலைகள் 02 வெற்றிச்சமர்.

## தலைவன் மனமோ என்றும் ஓயாத உணர்வலைகளால் பொங்குவதன் விளைவே ஓயாத அலைகள் 2





ஆக்கிரமிப்பு 29.09.1996




மீட்பு 27.09.1998







மூன்று நாட்கள் கூட புலிகளின் முற்றுகைச் சமர் முழுமையாக நீடிக்க முன்னரே நகர் அதன் புதல்வர்கள் கைக்கு போய்ச் சேர்ந்து விட்டது.



### சுவிஸ்

காலம் :– 22.02.1999 சனிக்கிழமை
நேரம் :– இரு காட்சிகள் பிற்பகல் 2.00 மணி, மாலை 7.30 மணி
இடம் :– VOLKSHA US. STAUFFA CHER STR- 60 ZURICH.

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)

### பிரான்ஸ்

காலம் :– 28.02.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :– இரு காட்சிகள் பிற்பகல் 3.00 மணி, மாலை 7.00 மணி
இடம் :– Le Trianon, 80 Bd Rochechouart, 75018 Paris Métro- Anvers

தமிழீழ விடுதலைப் புலிகள் (வெளியீட்டுப் பிரிவு, பிரெஞ்சுப் பணியகம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்